Registered as a News Paper in Sri lanka


விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு


# தினமுரசு
THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/848)

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 13 செவ்வாய்க்கிழமை (30.08.2011) பக்கங்கள் 16 ஓசை – 335




அரசியல் பேதங்களை ஒதுக்கி விட்டு... (08)



பாணந்துறையில் கண்கள் விற்பனை (09)

சைபீரியாவில் பறக்கும் தட்டு



(13)



மறுத்தார் சானியா (07)



# கட்சி தொடங்க சந்திரிகா திட்டம்

## அமைச்சர்கள் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களுடன் இரகசியக் கூட்டம்

(கொழும்பு)

புதிய அரசியல் கட்சி ஒன்றை அமைத்து மீண்டும் தீவிர அரசியலில் குதிப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா திட்டமிட்டுச் செயற்பட்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் முக்கிய நடவடிக்கையாக தனக்கு மிகவும் நெருக்கமானவர்களுடன் இணைந்து இரகசிய மந்திராலோசனை ஒன்றை நடத்தியுள்ளளார். தற்போதைய அரசியல் அமைச்சர்களாக உள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் உட்பட ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் சிலரும் இந்த இரகசியக் கூட்டத்தில் பங்குபற்றியிருக்கின்றனர்.

இந்த இரகசிய மந்திராலோசனைக் கூட்டத்தின் போது புதிய அரசியல் கட்சி ஒன்றை அமைப்பது குறித்து மிக விரிவாக ஆராயப்பட்டிருக்கிறது. இம்முயற்சிக்குக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களிடமிருந்து அதிக வரவேற்புக் கிடைத்ததாகத் தெரிகிறது.

இதனைத் தொடர்ந்து இப் புதிய அரசியல் கட்சிக்கான கூட்டமைப்பு எவ்வாறு இருக்கவேண்டும் என்று சற்று விரிவான விளக்கம் ஒன்றையும் சந்திரிக்கா வழங்கினார்.

மேலும் இம் முயற்சிக்கான மற்றுமொரு சந்திப்பு விரைவில் இடம்பெற இருப்பதாகவும் தெரியவருகிறது. சிறிமாவோ பண்டாரநாயக்கா சுதந்திரக் கட்சியின் தலைவியாக இருந்த காலத்தில் அவருடன் ஏற்பட்ட அரசியல் முரண்பாடு காரணமாக அக்கட்சியிலிருந்து பிரிந்துசென்று தனது கணவரின் தலைமையில் இலங்கை மக்கள் கட்சி என்ற கட்சியை தொடங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### பாடசாலைகளில் ஊழல் அதிகம்

அரசாங்கப் பாடசாலைகளுக்கு எதிராகவே அதிகளவு ஊழல் முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றது என இலஞ்ச ஊழல் முறைப்பாட்டு ஆணைக்குழு தெரிவிக்கின்றது. பிள்ளைகளை பாடசாலைகளில் அனுமதிக்கும்போது பல்வேறு சங்கங்கள் இலட்சக்கணக்கில் பணத்தைப் பெற்றுக்கொள்கின்றன என்று இலஞ்ச ஊழல் முறைப்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் ஜகத் பாலபடபெத்த குறிப்பிட்டார்.

# படகு கவிழ்ந்து மீனவர் பலி!

# தீவகக் கடலில் துயரம்

மண்டதீவுப் பகுதியில் இருந்து கடற்தொழிலுக்குச் சென்ற மீன் பிடிப்படகு ஒன்று நேற்று முன்தினம் கற்கடத்தீவுக் கடற் பகுதியில் கடும் காற்றுக்காரணமாக கடலில் கவிழ்ந்ததில் மீனவர் ஒருவர் நீரில் மூழ்கிப் பலியானார். மற்றொரு மீனவர் 12 மணிநேரம் மிதவை ஒன்றைப் பற்றியவாறு தத்தளித்துக் கொண்டிருக்கையில் மீட்புப் படகுகளால மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 6.00 மணியளவில் இத்துயரச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இச்சம்பவத்தில் மண்டைதீவைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான யாக்கோபு நிலாணியஸ் நிக்சன் (வயது - 30) என்பவரே பலியானார். அதே இடத்தைச் சேர்ந்த ஆறுபிள்ளைகளின் தந்தையாகிய யோசப் அன்ரனி லியூட்ஸ் (குட்டி, வயது - 43) என்பவர் மிதவை ஒன்றின் உதவியுடன் 12 மணிநேரமாக கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கையில் மீட்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்று காலை யாழ்போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இறந்தவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் குறித்து மேலும தெரியவருவதாவது:

நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணியளவில் குறித்த இருவரும் பிளாஸ்ரிக் படகில் கடற்தொழிலுக்காக மண்டைதீவில் இருந்து புறப்பட்டுச் சென்றுள்ளனர். சம்பவ நேரம் (15 ஆம் பக்கம் பார்க்க)

# மாணவியைக் காணவில்லை


## வடமராட்சியில் பெரும் பரபரப்பு

(கரவெட்டி)

வடமராட்சியில் உள்ள இமையாணன் குஞ்சர்கடைப் பகுதியைச் சேர்ந்த பள்ளி மாணவி ஒருவர் நேற்று காணாமல்போயுள்ளனர். உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் எட்டாம் ஆண்டில் கல்வி பயிலும் கனகலிங்கம் லக்சனா (வயது - 13) என்ற மாணவியே இவ்வாறு திடீரென நேற்று காணாமல் போயுள்ளார். வீட்டுக்கு அருகில் உள்ள கடையொன்றுக்கு நண்பகல் 12.30 மணியளவில் இச் சிறுமி சென்றிருக்கிறார். நீண்ட நேரமாகியும் இச் சிறுமி மீண்டும் வீடு திரும்பவில்லை. இதனைத் தொடர்ந்து பெற்றோரும் உறவினர்களும் உடனடியாகத் தேடுதலில் ஈடுபட்டனர். சிறுமி ஓட்டிச்சென்ற துவிச்சக்கர வண்டி மட்டும் வீதியோரத்தில் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றது. நேற்று இரவு வுரை உறவினர்கள் தேடுதல் முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர்.

நெல்லியடி மற்றும் வல்வெட்டித்துறை ஆகிய பொலிஸ் நிலையங்களில் இச்சம்பவம் குறித்து உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இச்சம்பவம் காரணமாக வடமராட்சிப் பகுதிகளில் நேற்று பெரும் பரபரப்பு நிலவியது. (18)

# மக்களை தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்தவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே – கருணா




மர்ம மனிதன் விவகாரத்தை பெரிதுபடுத்தி மக்களைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்தவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களேயென மீள்குடியேற்றப் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) குற்றஞ்சாட்டியுள்ளார். மட்டக்களப்பு மாவட்டத்தின் பொலிஸ் பிரிவுகளின் சிவில் விழிப்புக் குழுக்கள், அரசியல்வாதிகள் கலந்துகொண்டு களுவாஞ்சிக்குடியில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு அவர் கூறினார். அங்கு

மேலும் உரையாற்றுகையில், மர்ம மனிதன் விவகாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்டமை அனைவரும் அறிந்ததே. ஆனால் இந்த மர்ம மனிதனை நேரடியாகக் கண்டவர்கள் எவரும் இல்லை எல்லாம் வதந்தியாகும். இவற்றையெல்லாம் பெரிதுபடுத்தி மக்களைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்தவர்கள் தமிழ்த் (15 ஆம் பக்கம் பார்க்க)

# பிரதி அமைச்சர் கருணாவின் கூற்று முதிர்ச்சியின்மையை காட்டுகிறது

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு



மீள்குடியேற்ற பிரதியமைச்சர் "முரளிதரனின் கூற்று அரசியலில் அவரது முதிர்ச்சியற்ற தன்மையை காட்டுவதாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா, பா.அரியநேத்திரன் மற்றும் சீ.யோகேஸ்வரன் ஆகியோர் கூட்டாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:


"மர்ம மனிதன் பீதி காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்பேசும் மக்கள் கடந்த இரு வாரங்களுக்கு மேலாக அச்சமும், பீதியும் நிறைந்த சூழலில் வாழ்ந்தார்கள் என்பதை அந்நேரத்தில் மக்களோடு மக்களாக இங்கு இருந்திருந்தால் இக்கருத்துக் கூறிய பிரதியமைச்சர் உண்மை நிலையை அறிந்திருப்பார். (15 ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய அரசாங்கம் ! அரசு எப்போதும் தயார்

எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்தால் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு அரசு தயாராக உள்ளதாகப் பிரதமர் டி.எம்.ஜெயரட்ன தெரிவித்துள்ளார். மூன்று தசாப்த காலமாக யுத்தம் இடம்பெற்று வந்த நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த தேசிய அரசாங்கமொன்று அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும், தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது குறித்து அரசாங்கம் இதுவரையில் எதிர்க்கட்சிகளுக்கு எவ்வித அழைப்பையும் விடுக்கவில்லை (15 ஆம் பக்கம் பார்க்க)

# அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆற்றும் பணி அளப்பரியது

## ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சந்திரகுமார்



(கிளிநொச்சி)

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு தற்போது மீள்குடியேறியுள்ள மக்களின் மேம்பாட்டிற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆற்றும் பணி அளப்பரியது என ஈ.பி.டி.பி. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் 'சோஆ' நிறுவனத்தின் உதவியுடன் தெரிவு செய்யப்பட்ட இருபது பயனாளிகளுக்கு துவிச் சக்கர வண்டிகளை வழங்கி வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொண்டு நிறுவனங்கள் தொடர்ந்தும் எம்மக்களுக்கு தமது பணியை விரிவுபடுத்தி வழங்க வேண்டும் என நாம் அவர்களிடம் கோரிக்கை விடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவித்தார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச உதவித் திட்டப் பணிப்பாளர் ஜெயக்குமார், 'சோஆ' நிறுவன திட்ட இணைப்பாளர் சகாயநேசன், 'சோஆ' நிறுவனத்தின் திட்ட அலுவலர் நடராஜலிங்கம், கிராம சேவையாளர் வல்லிபுரம் மற்றும் சமூகசேவையாளர் மலர் வண்ணன் உட்பட பொது மக்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## அம்பு பாய்ந்து காவலாளி காயம்


வேடுவர் சமூகத்தைச் சேர்ந்த அங்கத்தவர் ஒருவர் நேற்று கண்டி வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகஸ்தர் ஒருவர் மீது அம்பு எய்து காயப் படுத்தியுள்ளார்.

வேடுவர் சமூகத்தைச் சேர்ந்த நபர், வைத்தியசாலைக்குள் நுழைவதை பாதுகாப்பு உத்தியோகஸ்தர் தடுத்ததையடுத்தே அவர் மீது அம்பு பாய்ந்தது.

## கிளிநொச்சியில் மருத்துவ முகாம்

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்தின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் ஒன்று எதிர்வரும் 3 ஆம் 4 ஆம் திகதிகளில் மேற்படி கட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இம் மருத்துவ முகாமில் கை, கால்களை இழந்தவர்களுக்கு செயற்கை அவயங்கள் வழங்கப்படவுள்ளதுடன் உடல் பரிசோதனை கண் பரிசோதனை போன்றனவும் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்தியா விலிருந்து வருகை தரும் பிரபல வைத்தியர்களினால் இச்சேவை வழங்கப்படவுள்ளதால் இப்பிரதேச மக்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (77)




நோன்பு பெருநாள் தொழுகைக்காக பள்ளிவாசலுக்கு ஒரு பாதையால் சென்று வேறு பாதையால் திரும்பி வருவதை நபி (ஸல்) அவர்கள் பல தடவைகள் கடைப்பிடித்து வந்துள்ளார்கள். (105)


## கூறுவிலை கோரல்

எமது கொத்தணியில் கட்டடங்கள் அமைப்பதற்கு தேவையான பின்வரும் பொருட்கள்


1. கண்டாவளை மணல்
2. சல்லி (1')
3. சல்லி ($^3/_4$')
4. சல்லி ($^5/_8$")
5. முறுக்கு கம்பிகள்

கொள்வனவு செய்வதற்கும் கூரைக்கான றஸ் செய்வதற்கும் கூறுவிலை கோரப்படுகின்றது. இதற்கான கூறுவிலைகளை எதிர்வரும் 10.09.2011ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக மூடிய கடித உறையில் இட்டு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ "தலைவர் வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் கொத்தணி, பிப்பிலிச் சந்தி மானிப்பாய்" என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பொது முகாமையாளர்
வலிகாமம் பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்
கொத்தணி மானிப்பாய்.

(C/915)


# 'தினமுரசு' பொது அறிவுப் போட்டி பரிசளிப்பு நிகழ்வில்...


நல்லைக் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு தினமுரசு பத்திரிகை நடத்திய பொது அறிவுப் போட்டியின் பரிசளிப்பு விழா நேற்று மாலை நல்லூர் கந்தசுவாமி கோவில் பின் வீதியில் அமைந்திருந்த தினமுரசு பந்தலில் விமரிசையாக நடைபெற்றது. நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் போட்டியில் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகளுக்கு பரிசில்களை வழங்கினார். இந்நிகழ்வில் முறையே முதலாம் பரிசான துவிச்சக்கர வண்டியை து.சுகன்யா, இரண்டாம் பரிசான வாயு அடுப்பினை வ.கமலராஜி, மூன்றாம் பரிசான வானொலிப் பெட்டியை மு.தியாகராஜா மற்றும் ஆறுதல் பரிசு பெறுபவர்களையும் காணலாம். (படங்கள்-பா.சிகான்)


சர்வஜித் சிறிகாந்தன்


கை.பவதாரணி


தனுஷா தவபாலன்


கே.எஸ்.சிவஞானராஜா


மனோகரராசன் நிஜகரன்


வி.தாட்சாயினி (தந்தை)


திருமதி.ற.குமாரசூரியர்


எச்.எஸ்.சர்மா


துரைசிங்கம் ரேனுகா


சீ.பிரவீண்

**துன்பம் இருக்கும் இடத்திற்கு நாமாக முன்வந்து சென்று அந்தத் துயரத்தை நீக்க நம்மால் முடிந்த செயலைச் செய்ய முயல வேண்டும். இது மிகப் பெரிய தர்மமாகக் கருதப்படுகின்றது.**

-காஞ்சிப் பெரியார்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## புதைமணலின் சரிவிலிருந்து மீள...

ஊழல் என்பது பணமோசடி மட்டுமல்ல கருத்து ரீதியான மோசடி, மக்களை ஏமாற்றுதல், பிழையான வழிகாட்டுதலைச் செய்தல், அரசியல் ரீதி யான குற்றம் போன்றவையும் ஊழல்தான் என்பது நமது இன்றைய புரிதல். ஊழலைப் புரிந்துகொள்ளுதல் என்பது இன்றைய அரசியலைப் புரிந்து கொள்ளுதல்தான் என்பதிலும் சந்தேகமில்லை.

சமூகவியலிலும் பொதுநிர்வாகத் துறையிலும் தற்கால ஆய்வு களைத் தொடக்கி வைத்தவர் எனக் கருதப்படும் மக்ஸ் வெபர் என்ற மேதை அரசியல் முதலாளித்துவம் என்ற ஒரு சொல்லைத் தன்னுடைய புத்தகத்திலே கையாண்டிருந்தார். மூலதனம் எழுதிய கார்ல் மார்க் ஸைப் போலவே இவரும் ஒரு ஜெர்மானியர். மார்க்ஸ் காலத்திற்குச் சற்றுப் பிந்தியவர்.

இவரது அரசியல் முதலாளித்துவம் என்ற கருத்து அவர் காலத்திற் குப் பின்பு உலகில் வெகு பிரபலமடைய ஆரம்பித்தது. மக்ஸ் வெபர் இந்த அரசியல் முதலாளித்துவம் பற்றி ஒரு சிறு வரையறையாகத்தான் தந்திருந்தார். எல்லையில்லா அளவுக்கு அரசாங்கப் பதவியின் அதிகா ரங்களைப் பயன்படுத்தி எந்தத் தொழிலும் செய்யாமல் பணம் சம்பாதிப் பது, அதைத் தொடர்ந்து அரசியலில் குற்றம்புரிவது, மக்களைக் கலக நிலையில் வைத்திருப்பது, இதைப் பயன்படுத்தி பதவிகளைப் பிடிப்பது, அரசியலிலும் ஆட்சியிலும் நிர்வாகத்திலும் இவைகளை ஒரு மாதிரி முறைமையாக உருவாக்கி விடுவது என்று இதற்கு அவர் விளக்கமளித் துள்ளார்.

மக்ஸ் வெபரின் விளக்கத்தை மூலக் கருத்தாக வைத்துக்கொண்டு கனேவ் என்ற சமூகவியல் ஆராய்ச்சியாளர், எப்படி கம்யூனிசத்தை கிழக்கு ஐரோப்பியா, ரஷ்யா போன்ற நாடுகளில் ஊழல் மூலம் வீழ்த்தி னர் என்பதை ஆராய்ச்சி செய்துள்ளார். இதேபோலத்தான் உலக மயமான பொருளாதாரமும் எல்லையில்லா ஊழலால் வீழ்ப் போவது வெகுதூரத்தில் இல்லை என்கிறார்கள்.

இங்கும் இதேபோன்ற ஓர் ஆராய்ச்சியை நடத்தினால், எப்படி ஒன்று மில்லாதவர்கள் அரசியலுக்குள் புகுந்து, மிகப்பெரிய அளவுக்குப் பணம் சம்பாதித்தனர் என்பதையும், மக்களது வாழ்நிலையை உயர விடாமல் வைத்திருப்பதன் மூலம் தங்கள் அரசியல் இருப்பை நிலைப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் உலகுக்கு அம்பலப் படுத்திவிடலாம்.

அரசியலிலும், பதவியிலும் தங்களைத் தக்க வைக்க எப்படிப்பட்ட கலகங்களையும், ஆவேசங்களையும், சாத்தியமற்ற கோரிக்கைகளை யும் ஏமாற்றாகப் புகுத்தும் ஊழல் மூலம் புதியதொரு அரசியலை உரு வாக்கினர் என்பதையும் ஆராய வேண்டும்.

இதற்கு அவர்களுக்குக் கிடைத்த காரணிகள் இரண்டு. ஒன்று, மக்க ளின் அறியாமை. இரண்டு, ஊடகங்களின் வலிமை. அரசியல், சமூக பொருளாதார மாற்றத்துக்காக புதிய கருத்துகளை மக்கள் மத்தியில் எடுத்துச்செல்லும் மத்தியதர வர்க்கத்தையும் புத்திஜீவிகளையும்கூட பழம்பெருமித உணர்வுகளால் தளைப்படுத்தப்பட்ட உணர்ச்சிகர ஆவே சத்திற்கு அடிமையாக்கி, அவைகள் மூலமும் தங்களது அரசியல் இருப் பைத் தக்க வைத்துக் கொண்டுள்ளனர்.

ஏற்கனவே புலம்பெயர்ந்து சென்றிருப்பவர்களும், எந்த நேரமும் புலம் பெயர்ந்து சென்றுவிடலாம் என்ற நிலையிலிருப்பவர்களும் இங் குள்ள பெருமளவு மக்களின் வாழும் விருப்பத்துடன்–ஏக்கத்துடன் அரசியல் விளையாட்டு நடத்தி வருகின்றனர். அப்பாவி மக்களது அறியா மையையும் ஏழ்மையையும் தங்களது அரசியல் பிழைப்புக்கான கோஷங்களாக மாற்றி வருகின்றனர்.

பொய்ப் பிரசாரத்துக்காகவும், அரசியல் வணிகத்துக்காகவும் உரு வாக்கப்பட்ட ஊடகங்கள் மக்களை வாழும் வழிக்கு நகரவிடாமல் நரம்புகளை முறுக்கி வதையாவேசத்திற்குள் வைத்திருக்கின்றன. மற்றவர்களை விட மேம்பட்ட இனப்பெருமிதத்தை உருவகப்படுத்தி, உச்சத்துக்குக் கொண்டு சென்று மக்களை ஒரு மாயையில் சிக்க வைத்து, வணிகப் பிழைப்பை நடத்தி வருகின்றனர். வாழும் வழிக்கு எதையும் செய்யக் காணோம்.

நம் அரசியல் பிரதிநிதிகள் அதே பழைய மிரட்டல் அரசியலைக் கைவிட்டு, புதிய தடத்தில் கால்பதிக்க வேண்டியதே மக்களிடம் அக் கறை கொண்டதன் அடையாளமாக அமையும். அரசியல் முதலாளித் துவம் என்பதை இனிமேலும் நம் அரசியலில் ஆதிக்கம் செய்ய விட லாகாது.

வீழ்ந்து கொண்டிருக்கும் பாதையிலிருந்து விலகி விவேகமுடன் புது வழிகாண வேண்டும்.

- ஆசிரியர் -

# டெங்கு நோயினால் ஒருவர் மரணம் 14 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்

## யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் கடந்த மாதம் டெங்கு நோயா ளிகள் 14 பேர் இனங்காணப்பட்டுள்ளதாகவும், இந நோயின் தாக்கம் காரணமாக ஒருவர் மரணம டைந்துள்ளதாகவும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரி வித்துள்ளார்.

கட்டுப்பாட்டில் இருந்த டெங்கு நோயின் தாக்கம் மீண்டும் அதிகரித்துச் செல்லும் நிலை காணப்படுவதாகக் குறிப்பிட்ட அவர் அடுத்து வரும் மாதங்களில் மழை காலத்தின் போது இந் நோயின் தாக்கம் மேலும் அதிகரித்துச் செல்லும் நிலை ஏற்படலாம் எனவும் எச்சரிகை விடுத்தார்.

இதன் காரணமாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினர் யாழ்.அரச அதிபர் தலைமையிலும் யாழ்.மாநகர சுகாதாரப் பகுதியின ருடன் இணைந்தும் இந்நோயின் தடுப்பு நடவடிக் கையில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கென இனங்காணப்பட்ட பகுதிகளில் நுளம புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த புகையூட்டல் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள தாகவும் தெரிய வருகிறது.

மேலும் மரணித்த டெங்கு நோயாளியின் இட மான அரியாலைப் பகுதியிலும் நல்லூர்ப் பிரதேசத் இவ்வாறான தடுப்பு நடவடிக்கைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளதாகவும் யாழ்.பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (பா)

## சர்வமத மௌனப் பிரார்த்தனை

(வவுனியா)

சர்வமதப் பேரவையின் ஏற்பாட்டில் அமைதி வேண்டி இன்று செவ்வாய்க்கிழமை இறம் மைப்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும் மௌனப் பிரார்த்தனையில் சர்வ மதத் தலைவர்களும் பொதுமக்களும் கலந்து கொள்வார்கள் எனப் பேரவையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மக்களைப் பீதிகொள்ள வைக்கும் வகையில் வவுனியாவில் கடந்த சில தினங்களாக கிறிஸ், பூதம் பற்றி வதந்திகள் உலவுகின்றன.

இதனால் மக்கள் மத்தியில் அமைதியின்மை ஏற்பட்டுள்ளது. பீதியுடன் வாழ்க்கை நடத்துகின்ற னர்.

இரவானதும் விழித்திருந்து இரவைக் கழிக் கின்றனர். அமைதியை நிலைநாட்டக் கடவுளை வேண்டி மௌனப் பிரார்த்தனை நடத்த பேரவை தீர்மானித்துள்ளது. (39)

# மர்ம மனிதன் அச்சத்தைப் போக்க ஒளிதந்த மின்குமிழ்களும் அபேஸ்

(யாழ்ப்பாணம்)

மர்ம மனிதன் பீதியை அடுத்து ஆனைக் கோட்டை, உயரப்புலம் பகுதியில் வீடுகளுக்கு முன்னால் வீதிகளில் பொருத்தப்பட்டு ஒளி பரப்பிக் கொண்டிருந்த மின் விளக்குகள் காணா மல் போயுள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வரு கையில்,

தற்போது குடாநாட்டில் ஏற்பட்டுள்ள மர்ம மனிதன் பீதியியையடுத்து இப்பகுதியில் உள்ள வீட்டு உரிமையாளர்கள் தங்கள் வீடுகளுக்கு முன்னால் உள்ள வீதிகளில் மின் விளக்குகளைப் பொருத்தி இரவு முழுவதும் அதனை ஒளிரவிட்டு வருகின்றனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் இப்பகுதிக்கான மின்சார விநி யோகம் சுமார் பத்து நிமிடங்கள் வரை தடைப் பட்டிருந்தது.

மின்சாரம் தடைப்படும் வரை ஒளிர்ந்து கொண்டி ருந்த மின்விளக்குகள் மின்சாரம் தடைப்பட்டு மீண்டும் வந்தபோது ஒளிரவில்லை. இதனைய டுத்து அவ்விடங்களுக்குச் சென்று பார்த்தபோது மின்விளக்குகள் காணாமல் போயிருந்தன. மர்ம மனிதன் பீதியை அடுத்து மிகவும் கலக்கமடைந் துள்ள கிராமங்களில் மேலும் இவ்வாறான நட வடிக்கைகளும் அவர்களை அச்சம் கொள்ளச் செய்துள்ளது.

## வடமராட்சி கிழக்கில் மத்திய மருந்தகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு அம்பன் பகுதியில் மத் திய மருந்தக நிர்மாணப் பணிகள் முடிவடைந்து அப்பகுதி மக்களுக்கான மருத்துவ சேவை வழங கப்பட்டு வருவதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரி வித்துள்ளார்.

ஏற்கனவே குறித்த பகுதியில் அமைந்திருந்த மத்திய மருந்தகம் யுத்தத்தின் போது அழிவ டைந்திருந்தது.

தற்சமயம் இப்பகுதியில் மக்கள் மீள்குடிய மர்த்தப்பட்ட பின்னர் அந்தப் பகுதியிலேயே இம மருந்தகம் அமைக்கும் பணி கடந்த சில மாதங் களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இப்பணிகள் நிறைவு பெற்று தற்போது அப் பகுதி மக்களுக்கான மருத்துவ சேவைகள் இம் மருந்தகத்தினூடாக நிறைவேற்றப்பட்டு வருவதா கத் தெரிவிக்கப்படுகிறது.

விரைவில் இம்மாதம் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்படவுள்ளதாகவும், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (பா)

## மந்தகதியில் இடம்பெறும் மருத்துவமனை புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணி வைத்தியசாலையில் நிர்மாணப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதா கவும் இந்நிர்மாணப் பணிகள் ஒப்பந்தக்காரரது கவன யீனம் காரணமாக மந்த கதியிலே இடம்பெற்று வரு வதாகவும் தெரிய வருகிறது.

இதன் காரணமாக வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களுக்கான மருத்துவ வசதிகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பின் தள்ளப்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் இடம்பெயர்ந்த மக்கள் அரசி னால் கட்டம் கட்டமாக மீள்குடியமர்த்தப்பட்டு வருகின றமை குறிப்பிடத்தக்கது.

நாகர்கோயில், சுண்டிக்குளம் போன்ற பகுதிகளில் கண்ணிவெடியகற்றும் நடவடிக்கைள் முற்றுப்பெற் றதும் அப்பகுதிகளிலும் மக்கள் மீள்குடியமர்த்தப் படவுள்ளனர். எனவே இப்பிரதேசத்தில் சகல வசதிக ளைளும் கொண்ட வைத்தியசாலை ஒன்றை நிர்மா ணிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்பது குறிப பிடத்தக்கது.

தற்சமயம் மேற்படி பகுதிகளில் இறந்து மேலதிக மான வைத்திய சேவைகளைப் பெற்றுக்கொள்ள அப் பகுதி மக்கள் நீண்ட தூரம் பயணித்து சாவகச்சேரி, வடமராட்சி மற்றும் யாழ்.நகரிற்குச் செல்ல வேண்டி யுள்ளது. (பா)

## திறப்பு விழாவும் அடிக்கல் நாட்டலும்

(வவுனியா)

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வட பிராந்திய அலுவலகம் இன்று காலை 9.30 மணிக்கு வவுனியா மாவட்ட செயலகத்தில் போக்குவரத்து அமைச்சர் குமாரவெல்கமவினால் திறந்துவைக்கப் படவுள்ளது.

அத்துடன் வவுனியா புதிய பஸ் நிலையத்திற்கான அடிக்கல்லையும் அமைச்சர் ஏ-9 வீதியில் அரச விவ சாயப் பண்ணைக்கு அருகாமையில் நாட்டிவைப்பார் என வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எம். எஸ்.சாள்ஸ் தெரிவித்தார். இந்த வைபவங்களில் அமைச்சர்களான றிசாட் பதியுதீன், கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் அமைச்சுக்களின் சிரேஷ்ட உயர் அதிகாரிகளும் கலந்துகொள்வார்கள். (39)

## கரணவாய் பிரதேசத்தில் விழிப்புக் குழுக்கள்

(கரணவாய்)

கரணவாய் பிரதேசத்திலுள்ள ஜே.350, ஜே.351 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங் களில் விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதா கத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கிராமங்களின் பாதுகாப்பினை கருத்திற் கொண்டே 10 பேர் கொண்ட விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இதில் செல்வாபுரம், அண்ணாசிலையடி, சோளங்கன் உள்ளிட்ட கிராம ங்களில் இரவு வேளைகளில் விழிப்புக் குழுக்க ளின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா கவும் தெரிவிக்கப்படுகிறது. (18)

# வடக்கிலுள்ள சிறுவர் இல்லங்களின் முன்னேற்ற நிலை குறித்து ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களிலுள்ள சிறுவர் இல்லங்களின் தற்போதைய நிலைமை குறித்தும் அவற்றின முன்னேற்றங்கள் குறித்தும் விரிவாக ஆரா யப்பட்டுள்ளது.

மாவட்ட மட்டத்திலான சிறுவர் இல்லங்களுக்கான ஆலோசனைக் குழுக்களின் வேலை முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் யாழ் பொதுநூ க வளாகத்தில் உள்ள மாகாண சபைக்கான கேட்போர் கூடத்தில் கடந்த 23ஆம் திகதி நடைபெற்றது.

வட மாகாண ஆளுநர் ஜி.ஏ சந்திரசிறி கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

இக்கூட்டத்தில் வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரும் ஆளுநரின் பதில் செயலாளருமான எல்.இளங்கோவன், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி.ர.விஜயலட்சுமி, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புத் திணைகளத்தின் ஆணையாளர் ரி.விஸ்வரூபன் பொதுச் சுகாதார பரிசோதகர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் இணைப்பாளர்கள் மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் பங்கு பற்றினர்.வட மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்திற்குமான ஆலோசனைக் குழுக்கள் ஒரு மாதத்திற்கு முன்னர் உருவாக்கப்பட்டிருந்தன. இந்தக் குழுக்களானது சிறுவர் நன்னடத்தை அலுவலர்களையும், ஆரம்பப்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உதவிப் பணிப்பாளர்களையும், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் தேசிய சிறுவர் பராமரிப்பு அதிகார சபையின் இணைப்பாளர்களையும் உள்ளடக்கியிருந்தன.

இந்த ஆலோசனைக் குழுக்கள் பதிவு செய்யப்படாத சிறுவர் இல்லங்களை பதிவுசெய்வதற்கு வேண்டிய சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தனர். அத்துடன் சிறுவர் இல்லங்களைப் பற்றிய விபரங்களைச் சேகரித்து பகுப்பாய்வு செய்த பின்னர் நிலவர அறிக்கையினை தயாரித்துள்ளனர். இவ்வறிக்கைகள் ஏற்கனவே ஆளுநருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

நான்கு உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுக்கள் வடக்கு மாகாண மாவட்டங்களிலுள்ள பெரும்பாலான சிறுவர் இல்லங்களுக்கு விஜயத்தினை மேற்கொண்டிருந்தன. இவர்களது முழுமையான அறிக்கை இக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்பட்டுள்ளது.

## வயல்களின் வரட்சியினால் இயந்திர நெல் அறுவடை பாதிப்பு

(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி கரியாலை நாகபடுவான் குளத்தின் கீழான சிறு போக நெல் அறுவடையை மேற்கொள்வதில் விவசாயிகள் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

குளத்தின் நீர் வற்றி வயல் நிலங்கள் காய்ந்து காணப்படுவதன் காரணமாக நெல் அறுவடை இயந்திரங்களினால் நெல் அறுவடையை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது.

நெல் அறுவடை இயந்திரங்கள் அறுவடையை மேற்கொள்வதற்கு வயல் நிலங்களில் ஈரலிப்புத் தன்மை இருக்க வேண்டும் ஆனால் வயல் நிலங்கள் வரட்சியாக் காணப்படுகின்றன.

இதன் காரணமாக விவயாயிகள் இந்த நெல் அறுவடை நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பல இன்னல்களை எதிர் நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (121)

## பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம்

(அளவெட்டி)

அளவெட்டி அருணோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுககூட்டம் எதிர்வரும் 04.ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபரும் பழைய மாணவர் சங்கத்தின் தலைவருமான நா.கேதீஸ்வரன் தலமையில் நடைபெறவுள்ளது. பொதுக்கூட்டத்தில் அடுத்துவரும் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறவுள்ளது.

எனவே இக் கூட்டத்துக்கு கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது வருகை தருமாறு சங்கத்தின் செயலாளர். பா.பிரதீபன் கேட்டுக் கொண்டுள்ளதுடன் புதிய அங்கத்தவர்களும் தமக்கான அங்கத்துவத்தையும் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளார்

## பனிக்கன் குளத்தில் 50 வீடுகளுக்கு அடிக்கல் நாட்டும் வைபவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பனிக்கன் குளம் கிராமத்தில் 50 வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் வீடுகளுக்கான அடிக்கல்லை வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் விமல் வீரவன்ச நாட்டி வைத்து பணிகளை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இக்கிராமத்தில் மீளக்குடியமர்ந்த மக்களின் வீட்டு வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் இவ்வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (121)

## முறைப்பாடுகளை தமிழில் எழுத விண்ணப்பப் படிவங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பொலிஸ் நிலையங்களில் பொதுமக்கள் தமது முறைப்பாடுகளைச் செய்வதில் காணப்படும் மொழி குறைபாட்டை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் என்.டி.தளுவத்த பொதுமக்களுக்கு நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

இதற்கிணங்க பொதுமக்கள் முறைப்பாடுகளை தமிழில் எழுதிக் கொடுப்பதற்கான படிவங்களை யாழ். மாவட்ட பொலிஸ் நிலையங்களில் அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இந்தப் புதிய நடைமுறையினை பொதுமக்கள் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## பளையில் 400 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைக்க ஏற்பாடு

(அம்பலப்பெருமாள்)

பளைப் பிரதேசத்தில் 400 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைக்கப்படவுள்ளதாக பளைப் பிரதேச செயலர் ரி.முகுந்தன் தெரிவித்துள்ளார். சுவிஸர்லாந்து அபிவிருத்தி நிறுவனத்தின் உதவியுடன் இவ் வீடுகள் அமைக்கப்படவுள்ளது.

மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் நன்மை கருதி நிரந்தர வீடுகள் அமைப்பதுடன் மாரி கால மழையினைக் கருத்திற் கொண்டு இம்மக்களுக்கு தற்காலிக வீடுகளை அமைக்கும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (121)

## யுத்த பாதிப்புக்குள்ளான பாடசாலைகளை மீளக்கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை

(மன்னார்)

வன்னி மாவட்டத்தில் யுத்தத்தால் அழிந்த பாடசாலைகளை மீளஅமைத்து, அதற்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதென வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக் தெரிவித்துள்ளார்.

முசலி பிரதேசத்தில் அமைந்துள்ள பூநொச்சிக் குளம் கிராமத்துக்கு விஜயம் செய்த அவர் 35 இலட்சம் 'ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய பாடசாலைக்கான அடிக்கல்லினை நாட்டி வைத்ததன் பின்னர் உரையாற்றும் போதே மேற் கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

மாணவ சமூகத்தின் கல்வி மேம்பாடுகள் குறித்து அதிக கவனத்தை நாம் செலுத்தி வருகின்றோம். அதன் மூலம் தான் நாம் இழந்த பலவற்றை பெற்றுக் கொள்ள முடியும், இன்று யுத்தமில்லை ஆனால் மக்களைக் குழப்புவதற்கு சிலர் முனைகின்றனர். முஸ்லிம்கள் தமது மதக் கடைமைகளை பள்ளிகளுக்குச் சென்று செய்வதற்கு தடையேற்படுத்தும் வகையில் கடிதங்களை அனுப்புகின்றனர்.

இந்தச் செயலின் பின்னணியில் தீய சக்திகள் இருப்பது தெளிவாகியுள்ளது. இது குறித்து மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தமிழ், முஸ்லிம் உறவு கட்டியெழுப்பப் படவேண்டுமெனில் எமக்கிடையில் புரிந்துணர்வு இன்றியமையாதது என்று கூறினார்.

## 75 சுகாதார மத்திய நிலையங்களை வடக்கு கிழக்கில் அமைக்க ஏற்பாடு

(கிளிநொச்சி)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் 75 மத்திய சுகாதார நிலையங்களை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவித்துள்ளன. மத்திய நிலையங்களை அமைப்பதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் 20 கோடி ரூபா நிதியினை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி மாகாணங்களிலுள்ள மக்களின் சுகாதார சேவைகளை இலகுபடுத்தும் வகையிலேயே இந்தச் சுகாதார மத்திய நிலையங்களை அமைப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன. (121)



எல்.பி. பினான்ஸ் நிதிக்கிளையின் சாவகச்சேரி கிளை அண்மையில் சாவகச்சேரி பிரதான வீதியில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் நிதி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சுமித் அடிற்ஹெட்டி கிளையை நாடாவெட்டி திறந்து வைப்பதையும், சாவகச்சேரி கிளை முகாமையாளர் ஜெ.ஜெ.ரொஷான் உரையாற்றுவதையும், அருகில் பிரதேச முகாமையாளர் எஸ். தவசீலன் நிற்பதையும் வாடிக்கையாளர் சி.காந்தரூபன் கணக்கினை ஆரம்பித்து வைப்பதையும் காணலாம். (11)

# மர்ம மனிதன் போர்வையில் பருத்தித்துறையில் திருடர்கள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறையில் சில பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு மர்ம மனிதன் என்ற போர்வையில் திருடர்களின் நடமாட்டம் காணப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பருத்தித்துறை மடத்தடி வெள்ளுருவைப் பகுதியில் வீடு ஒன்றில் முன்பகுதியில் வீட்டின் உரிமையாளர் உறங்கிக்கொண்டிருந்த போது வீட்டின் ஜன்னல் வழியாக கை ஒன்று உள்நுழைவதை அவதானித்துள்ளார். அந்தக்கை வெள்ளை நிறத்தில் கவசமிடப்பட்டிருந்ததாகவும், படிப்படியாக கை உள்நுழையும்போது விழிப்படைந்து கொண்ட குடும்பஸ்தர் விளக்குகளை எரிய விட்டுப் பார்த்தபோது திடீரென கைமறைந்ததுடன் அவர் தப்பியோடியுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேபோன்று பருத்தித்துறை இலகடி, பருத்தித்துறை மந்திகை, அத்தாய் ஆகிய பகுதிகளிலும் இவர்களின் நடமாட்டம் காணப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

# விரிவுரைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைபீடத்தின் பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா முழுநேர கற்கைநெறி (2009 -2010) புதிய கல்வியாண்டுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இக்கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டுப் பதிவு செய்யப்பட்ட புதுமுக மாணவர்கள் அன்றையதினம் காலை 8.30 மணிக்கு கல்வியியற்துறை அலுவலகத்திற்குச் சமூகமளிக்குமாறு பதிவாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# சிவபுரம் கிராமத்திற்கு மின்சார வசதி இல்லை

(வவுனியா)

வவுனியா - மன்னார் வீதியிலுள்ள நாலாங்கட்டை சிவபுரம் கிராமத்திற்கு மின்சார வசதி இல்லாத காரணத்தால் மாணவர்கள் வெகுவாகப் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதான வீதி வழியாக மின்சார விநியோகம் இடம்பெற்று வருகின்றபோதும் தங்களுடைய கிராமத்துக்கு மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது இருப்பதாக இப்பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் தம்முடைய கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது சிரமப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

குறிப்பிட்ட பிரதேசத்தில் மின்சார விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இக்கிராமத்திலுள்ள மாணவர்களின் கல்வி நலன் கருதி நடவடிக்கைகளை கருத்திற்கொண்டு அதிகாரிகள் மின்சார வசதியைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இப்பிரதேச மக்களும் பாடசாலை மாணவர்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (121)

# சனசமூக நிலையத்தின் சூழலில் குவிந்து காணப்படும் குப்பைகள்



(யாழ்ப்பாணம்)

யாழ். பலாலி வீதி ஆரியகுளம் பகுதியில் கைத்தொழில் பேட்டைக்கு அருகாமையில் அமைந்துள்ள சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சனசமூக நிலைய கட்டடத் தொகுதியில் குப்பை கூழங்கள், இறந்த கால் நடைகளின் உடல்கள் என்பன தேங்கிக் கிடப்பதனால் அப்பகுதியில் சுகாதார சீர்கேடுகள் நிலவுகின்றன.

இதனால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரிப்பதுடன் டெங்குநோய் பரவும் அபாயங்களும் நிலவுவதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் சனசமூக நிலையத்தில் பத்திரிகைகளை வாசிக்கச்செல்பவர்கள் துர்நாற்றத்தின் மத்தியிலும் பத்திகை வாசிப்பதாகவும், சில சந்தர்ப்பங்களில் வாசிக்க முடியாமல் எழுந்து செல்லும் சந்தர்ப்பங்களும் அமைகின்றன.

இத்துடன் ஆரியகுளம் பகுதியில் சுற்றுலாப் பயணிகளும் வந்து பார்வையிட்டுச் செல்வதுடன், உயர் கல்வி நிறுவனங்களும், வர்த்தக நிலையங்களும் கைத்தொழிற் பேட்டைகளும் காணப்படுகின்றன.

இப்பகுதி குப்பை கூழங்களை அகற்றுவதற்கும் சுகாதாரச் சீர்கேடுகளிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கும் உரிய அதிகாரிகள் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (எஸ்)

# விளையாட்டு மைதானத்தை புனரமைப்புச் செய்ய ஏற்பாடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தின் விளையாட்டு மைதானம் புனரமைக்கப்படவுள்ளது. கடந்த போர் காரணமாக சேதமடைந்த நிலையில் பற்றைகள் வளர்ந்து காணப்பட்ட இம் மைதானத்தினை பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இம் மைதானப் புனரமைப்பின் பின்னர் இப்பாடசாலை மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கும் உடற்கல்விப் பாடச்செயற்பாட்டை மேற்கொள்வதற்கும் ஏதுவாக அமையும் என தெரிவிக்கப்படுகிறது. (121)

# கிளிநொச்சி மருத்துவ மனைகளில் வயிற்றோட்ட நோயாளர் அதிகரிப்பு

(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி அக்கராயன் மருத்துவமனையில் வயிற்றோட்ட நோய்க்கான சிகிச்சை பெறும் நோயாளர்களின் தொகை திடீரென அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நிலவும் வெப்பமான காலநிலை காரணமாக இந்த நோய்த்தாக்கம் அதிகரித்திருப்பதாக மருத்துவர்களினால் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக மணியம்குளம் பகுதியிலேயே கூடுதலாக இந்த நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ள தாகவும் பொதுமக்கள் கொதித்தாறிய நீரினைப் பருகுமாறும் சுகாதார நடைமுறைகளை தவறாது கடைப்பிடிக்குமாறும் மருத்துவர்களினால் நோயாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் அறிவுறுத்தப்பட்டு (121)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

முகாவில் - பளை என்னும் முகவரியைச் சேர்ந்த பால கிருஸ்ணன் மயூரதன் என்பவரின் தற்காலிக அடையாள அட்டை, புனர்வாழ்வு முகாம் அடையாள அட்டை, சம்பத் வங்கி ATM காட் அடங்கிய பேஸ் ஒன்று பேருந்தில் கண்டெடுக்கப்பட்டு தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம், முல்லைத்தீவு பணிமனையில் உள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# நோன்புப் பெருநாள் இன்று தீர்மானிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

நோன்புப் பெருநாளைத் தீர்மானிக்கும் மாநாடு இன்று இரவு நடைபெறவுள்ளது. கொழும்பு பெரிய பள்ளிவாசலில் மஃறிப் தொழுகையின் பின்னர் நடைபெறும் இம்மாநாட்டில் அகில இலங்கை உலமா சபையும், பள்ளிவாசல் நிர்வாகிகளும், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள அதிகாரிகளும் ஒன்றுகூடுகின்றார்கள்.

இம்மாதம் 2 ஆம் திகதி நோன்பு ஆரம்பமானது 29 நாட்கள் நோன்பை நிறைவேற்றிய நிலையில் நோன்புப் பெருநாளைத் தீர்மானிப்பதற்காக ஷலவால் பிறை தென்படவேண்டும்.

இன்று நாட்டில் எப்பகுதியிலாவது பிறை தென்பட்டால் உலமாசபையின் ஊடாக அல்லது பெரிய பள்ளிவாசலுடன் தொடர்புகொள்ளலாம் என முஸலிம் திணைக்களப் பணிப்பாளர் வை.எல்.எம்.நவலி தெரிவித்தார்.

இன்றைய மாநாட்டில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையின் பொறுப்பாளர்களும் பங்குபற்றி உடனடியாகத் தகவல்களை வானொலிமூலம் அறிவிக்கப்படக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (105)

# குருநகர் பகுதிகளிலும் மர்மமனிதன் நடமாட்டம்

(குருநகர்)

குருநகர் - றெக்கிளமேசன் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு மர்ம மனிதன் நடமாட்டம் காணப்பட்டதாகக் கூறப்படுகிறது.

நள்ளிரவு ஆரம்பமான களேபரம் நேற்று திங்கட்கிழமை அதிகாலை மூன்று மணிவரை பீதியால் மக்களை உறைய வைத்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

றெக்கிளமேசன் பகுதியில் அமைந்துள்ள கொலைவிலக்கி மாதா மற்றும் வேளாங்கன்னி மாதா சிற்றாலயப் பகுதியிலேயே மேற்படி களேபரங்கள் நடந்தேறியுள்ளது. (68)

# உணவும் பானமும் பரிமாறுதல் சான்றிதழ் பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையினால் உணவும் பானமும் பரிமாறுதல் 12 நாள் சான்றிதழ் பயிற்சிநெறி எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை றில்கோ ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பித்த இளைஞர், யுவதிகள் எதிர்வரும் 2 ஆம் திகதி கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள தொழிற்பயிற்சி அதிகார சபையின் மாவட்ட அலுவலகத்திற்கு சமூகம் அளித்து பயிற்சி நெறி தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (எஸ்)

# வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகினால் நடத்தப்படும் பொதுக் கலைமாணித் தேர்வுப் பகுதி - 11 (2008) நாடகமும் அரங்கியலும் பாடத்திற்கான செயன்முறைப் பரீட்சைக்கு முன்னரான வழிகாட்டல் கருத்தரங்கு நாளை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள கலைத்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் ஏற்கனவே எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்துப் பரீட்சார்த்திகளையும் தவறாது கலநது கொள்ளுமாறு பதிவாளர் அறிவித்துள்ளார்.

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

[30.08.2011 – செவ்வாய்க்கிழமை]

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
கர வருஷம்
ஆவணி 13 ஆம் நாள்.
இராகுகாலம்03.05–4.35, சுபநேரம் 10.35 –12.05,
நட்சத்திரம்: பூரம் மு.ப. 11.49 வரை
திதி: பிரதமை காலை 7.12 வரை
துதியை பி.இ. 4.56 வரை.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** பணக் கஷ்டம், இனசன அழைப்பு, காரியத்தடை, பயனற்ற பேச்சு, விபத்து வரலாம்.

**ரிஷபம:–** குடும்பத்தில் மகிழ்ச்சி, பணவரவு, எதிரியை வெல்லுதல், பெரியோர் பாராட்டு, உற்சாகம்.

**மிதுனம் :–** பணக் கஷ்டம், உறவினர் தொல்லை, மனக் குறை, அதிகாரப் போட்டி, நினைத்ததைச் சாதித்தல்.

**கடகம்:–** தொழில் விருத்தி, பணவரவு, பிணக்குத் தீர்தல், சகோதர பாசம், வீணாக ஆத்திரப்படல்.

**சிம்மம்:–**பணக் கஷ்டம், வெளிநாட்டு உதவி, உடல் உபாதை, சுற்றத்தார் ஆதரவு, தொழிலில் விருத்தி.

**கனனி :–** நண்பர் வருகை, பணவரவு, மனமகிழ்ச்சி, வெளிநாட்டு உதவி, பிணக்குத் தீர்தல்.

**துலாம் :–** பணக் கஷ்டம், நண்பர் தொல்லை, தேக சுகக் குறைவு, திருமணப் பேச்சு, வீண் அலைச்சல்.

**விருச்சிகம்:–** வாய்ப்புக்களை இழத்தல், பண வரவு, சகோதர வெறுப்பு, சுற்றத்தார் ஆதரவு, அதிகாரிகள் கவலை.

**தனுசு:–** பணக் கஷ்டம், தொழில் ஆதாயம், குடும்பத்தில் துயரம், வசதிக் குறைவு, பிணக்குத் தீர்தல்.

**மகரம:–** குடும்பத்தில் மகிழ்ச்சி, பண வரவு, பெரியோர் பாராட்டு, விருந்துபசாரம், விபத்து வரக்கூடும்.

**கும்பம் :–** பணக் கஷ்டம், குடும்பத்தில் கவலை, தொழில் முடக்கம், சுற்றத்தார் ஆதரவு, வெளிநாட்டு உதவி.

**மனம்:–** குடும்பத்தில் கவலை, பணவரவு, அதிகாரப் போட்டி, எதிரிகளை வெல்லுதல், பிணக்குத் தீர்தல்.

விளையாட்டு செய்திகள்

### தெற்காசிய கடற்கரை விளையாட்டு விழாவில்

# யாழ்., வவுனியா அணிகள் பங்கேற்காமை விளையாட்டு ஆர்வலர்களிடையே அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

உரிய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொண்டால் மாத்திரமே அடுத்த நிலையை நோக்கி நகர முடியும். இந்த வகையில் தெற்காசிய கடற்கரை விளையாட்டு விழாவில் பங்கேற்கும் வாய்ப்பை பெற்றுக் கொள்ளும் தகுதி இருந்தும் அதைப் புறக்கணித்ததன் மூலம் யாழ். மற்றும் வவுனியா அணிகள் அந்த வாய்ப்பை இழந்துள்ளதென விளையாட்டு ஆர்வலர்கள் கவலை தெரிவித்தனர்.

நாட்டின் அசாதாரண சூழ்நிலையைக் காரணம் காட்டி இலங்கையில் முதல் முறையாக நடைபெறவுள்ள தெற்காசிய கடற்கரை விளையாட்டு விழா தொடரிலிருந்து யாழ். மற்றும் வவுனியா அணிகள் விலகிக் கொண்டன.

இதில் ·இலங்கை சார்பாக பங்குபற்றவுள்ள மாவட்ட வலைப்பந்தாட்ட அணிகளுக்கிடையிலான தகுதிப் போட்டி கடந்த 27ஆம் திகதி நீர்கொழும்பில் நடைபெற்றது.

இதில் கொழும்பு இலங்கைப் பாடசாலை, கொழும்பு ஸ்ரேஸ் சேவிஸ் மற்றும் கம்பஹா அணிகள் வெற்றிபெற்று தெற்காசிய கடற்கரை விளையாட்டு விழாவில் பங்குபெறும் தகுதியைப் பெற்றன.

இத்தகுதிச் சுற்றுப் போட்டித் தொடரில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் பங்குபற்றியிருந்தன. இதில் முல்லைத்தீவு மாவட்டம் காலிறுதி வரை முன்னேறியது.

வடமாகாணத்தில் சிறப்பான அனுபவங்களையும், பல வெற்றிகளையும் கொண்டுள்ள யாழ். மாவட்ட அணி பங்குபற்றியிருப்பின் தகுதிச் சுற்றில் முதல் மூன்று அணிகளில் ஒன்றாகத் தெரிவாகியிருக்கும்.

ஏழு நாடுகள் பங்குபற்றவுள்ள இத்தொடரில் யாழ். மாவட்ட அணியும் பங்குபற்றியிருப்பின் மேலும் பல அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு நிச்சயம் கிடைத்திருக்கும். போட்டித் தொடரிலிருந்து விலகிக் கொண்டதன் மூலம் அந்த வாய்ப்பு அதற்கு கிடைக்காமல் போய்விட்டது.

பெற்றோர்கள் அச்சப்பட்டதால், வீராங்கனைகளை இப்போட்டித் தொடரில் பங்கு கொள்ள அனுமதிக்கவில்லை. ஒரு வேளை போட்டிப் பரீட்சையாகவோ, நேர்முகத் தேர்வாகவோ இருக்குமிடத்தில் அவர்களே, அவ்விடத்திற்கு அழைத்துச் செல்லும் நிலை உருவாகியிருக்கும். எனவே, இனிவரும் காலங்களிலாவது கிடைக்கப்பெறும் சந்தர்ப்பங்களை உரிய முறையில் பயன்படுத்தி கொள்ளும் வாய்ப்பை நழுவவிடாது, அதிலிருந்து சிறந்த அனுப வங்களைப் பெற்றுக கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தனர.

## நாளை 2ஆவது சுற்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கம் நடாத்தும் பிரிவு மூன்றின் இரண்டாவது சுற்று ஆட்டமொன்றில் சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மற்றும் சென் ஜோன்ஸ் கல்லூரி அணிகள் மோதவுள்ளன.

இப்போட்டி சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளது.

இரு கல்லூரிகளின் 15 வயதுப் பிரிவினருக்கிடையில் இப்போட்டி நடைபெறவுள்ளது.

சென் ஜோன்ஸ் கல்லூரி அணி, தனது முதல் போட்டியில், மட்டக்களப்பு மைக்கல் கல்லூரி அணியை வெற்றி கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## தென்மராட்சி பிரதேச மட்ட மெய்வல்லுநர் போட்டி

(மட்டுவில்)

இளைஞர் சேவைகள் மன்றத்தினால் தென்மராட்சிப் பிரதேசத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழக வீர, வீராங்கனைக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி இன்று இடம்பெறவுள்ளது.

இப்போட்டி மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இரு பிரிவுகளாக காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதில் 13 வயது முதல் 19 வயது வரை ஒரு பிரிவாகவும், 20 முதல் 28 வயது வரை இன்னொரு பிரிவாகவும் நடைபெறவுள்ளது.

இந்த மெய்வல்லுநர் போட்டியில் தென்மராட்சிப் பிரதேசத்திற்குள் பதிவு செய்யப்பட்ட அனைத்துக் கழக வீர, வீராங்கனைகளும் பங்குகொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொள்ளும் வீர, வீராங்கனைகளுக்கு பெறுமதி வாய்ந்த சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்படும் என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (118)

# மெய்வல்லுநர், ஆசிரியர்களுக்கான பயிற்சி முகாம் சிறப்புற நடந்தேறியது





(யாழ்ப்பாணம்)

மெய்வன்மைப் பயிற்சி முகாம் வட்டுக்கோட்டையில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரியில் கடந்த 17ஆம் திகதி தொடக்கம் 20ஆம் திகதி வரை நடைபெற்றது.

வட மாகாண கல்வித்திணைக்களம் 150 மெய்வல்லுன மாணவர்களுக்கும் 50 ஆசிரியர்களுக்கும் வதிவிட மெய்வன்மைப் பயிற்சி முகாமொன்றினை ஒழுங்குபடுத்தியிருந்ததாக வட மாகாண கல்வித்திணைக்களத்தின் உடற்பயிற்சிக் கல்விக்கான உதவிக் கல்விப்பணிப்பாளர் கே.சத்தியபாலன் தெரிவித்தார்.

வட மாகாணமட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளிலிருந்து தேசிய மட்டப் போட்டிகளுக்காக தெரிவு செய்யப்பட்ட முதல் நான்கு இடங்களையும் பெற்ற 150 மெய்வல்லுநர் வீரர்களுக்கு இப் பயிற்சி முகாமில் பயிற்சி வழங்கப்பட்டது. இப் பயிற்சி முகாமிற்கு கொழும்பிலிருந்து வருகை தந்த 10 தேசியமட்ட விளையாட்டுப் பயிற்சியாளர்களும் வடமாகாணத்தைச் சேர்ந்த 10 விளையாட்டுப் பயிற்சியாளர்களும் இணைந்து தமது பயிற்சியினை மாணவர்களுக்கு வழங்கியிருந்தனர்.

இச் சந்தர்ப்பத்தில் வடமாகாண கல்வி வலயங்களைச் சேர்ந்த 50 உடற்கல்வி ஆசிரியர்களுக்குமான மெய்வல்லுநர் சட்டதிட்டங்களும் பொதுப் பயிற்சி முறைகளும் தொடர்பான பயிற்சி முகாமும் கொழும்பிலிருந்து வருகை தந்த பயிற்றுவிப்பாளர்களினால் நடாத்தப்பட்டது.

# அலெக்சன் ஞாபகார்த்த கரப்பந்தாட்டம் காலிறுதியில் வளர்மதி, நவஜீவன் அணிகள்

(மட்டுவில்)

அலெக்சன் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்டு வரும் கரப்பந்தாட்டத் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு மட்டுவில் வளர்மதி மற்றும் உடுப்பிட்டி நவஜீவன் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

கைதடி வடக்கு நவ சனசமூக நிலையமும், நவசக்தி விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் அலெக்சன் ஞாபகார்த்த கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நவசக்தி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் தென்மராட்சிப் பிரதேச மட்டத்திலான போட்டித் தொடர் ஒன்றும், யாழ். மாவட்ட ரீதியிலான போட்டித் தொடர் ஒன்றும் இடம்பெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் இடம்பெறவிருந்த தென்மராட்சிப் பிரதேச மட்டப் பிரிவுப் போட்டியில் வளர்மதி அணியும், சிவன் அணியும் மோதவிருந்தன. எனினும் சிவன் அணி சமூகமளிக்காததால் மட்டுவில் வளர்மதி அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. இதன் மூலம் காலிறுதிப் போட்டியில் மோதும் வாய்ப்பை வளர்மதி அணி பெற்றுக் கொண்டது.

தொடர்ந்து நடைபெறவிருந்த மாவட்ட மட்டப் போட்டியில், அரியாலை ஐக்கிய அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன் அணி மோதவிருந்தது. இப்போட்டியிலும் அரியாலை ஐக்கிய அணி சமுகமளிக்காததால் உடுப்பிட்டி நவஜீவன் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. இதன் மூலம் உடுப்பிட்டி நவஜீவன் அணி காலிறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றது.

மேற்படி இரு போட்டிகளும் நடைபெறாததால் ரசிகர்கள் ஏமாற்றமடைந்தனர்.

இதேவேளை, இன்று நடைபெறும் போட்டியில் தென்மராட்சிப் பிரதேச மட்டப் போட்டியில் கைதடி சித்தி விநாயகர் அணியை எதிர்த்து கண்ணகி அணியும், யாழ். மாவட்ட மட்டப் போட்டியில் கோப்பாய் ஐக்கிய 'ஏ' அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் 'பி' அணி மோதவுள்ளன.(118)

## அருணோதய வீரரும் பங்கேற்பு

ஆசிய நாடுகளுக்கிடையே நடைபெறவுள்ள கனிஷ்ட பிரிவினருக்கான தடகளப் போட்டிகளில் இலங்கை சார்பாக பங்குகொள்ளவுள்ள வீர, வீராங்கனைகளுக்கான தெரிவுப் போட்டிக்கு அளவெட்டி அருணோதயாக் கல்லூரியைச் சேர்ந்த இருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அளவெட்டி அருணோதயாக் கல்லூரியைச் சேர்ந்த வீரன் பி.லவன்யன் மற்றும் எ.பவித்திரா ஆகியோரே தெரிவு செய்யப்பட்டவர்கள். இவர்கள் இருவரும் 20 வயதிற்குட்பட்டவர்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் பயிற்சி பெறவுள்ளனர். இவர்கள் இருவரும் பாடசாலை மட்டத்திலான மாகாணப் போட்டிகள் மற்றும் தேசியமட்டப் போட்டிகளில் கலந்துகொண்டு பதக்கங்களை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டெஸ்ட் போட்டிகளின் முக்கியத்துவம் அடுத்த சில ஆண்டுகளில் குறையும்

(மெல்போர்ன்)



அடுத்த சில ஆண்டுகளில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முக்கியத்துவம் குறைந்துவிடும் என்று மேற்கிந்தியத்தீவுகள் முன்னாள் வீரர் மைக்கல் ஹோல்டிங் தெரிவித்தார்.

அதிக அளவில் டெஸ்ட் போட்டிகள் விளையாடப்படுவதால் இன்னும் சில ஆண்டுகளில் போட்டியின் தரம் குறைந்துவிடும். டெஸ்ட் கிரிக்கெட்டைப் பொறுத்தவரையில் இப்போது அதிக அளவில் போட்டிகள் நடைபெறுகின்றன. ஆனால் தரமான போட்டிகளாக இல்லை. காலத்துக்கு ஒவ்வாததாக மாறிவிடும். இது மிக மிக வருந்தத்தக்கது. போட்டிகளின் எண்ணிக்கை குறைக்கப்படாவிட்டால் வேகப் பந்துவீச்சாளர்களின் எண்ணிக்கையும் அரிதாகிவிடும். வேகப்பந்து வீச்சாளர்களை அதிக அளவிலான போட்டிகளில் விளையாடும்படி வற்புறுத்தினால் அவர்களால் நிறையப் போட்டிகளில் விளையாடமுடியும். ஆனால் மணிக்கு 90 மைல் வேகத்தில் பந்துவீச முடியாது. டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் விளையாடுவது என்பது கடினமானது. எனவே நீண்ட காலம் விளையாட முடியாது. வேகப்பந்து வீச்சாளர்கள் எண்ணிக்கை கொஞ்சம் கொஞ்சமாக குறைந்துவிடும் எனவும் அவர் தெரிவித்தார்.

## நாளை ஆரம்பம்

இலங்கை, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி நாளை காலி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. சொந்த மண்ணில் ஒரு நாள் தொடரை இழந்த நிலையில் இலங்கை அணிக்கு முக்கியத்துவம் வாய்ந்த தொடராக இந்த டெஸ்ட் தொடர் அமைந்துள்ளது.

□ □ □

இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான ஒரேயொரு ருவெண்ரி 20 போட்டி நாளை நடைபெறவுள்ளது. 5 போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடர் எதிர் வரும் 3ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

# வடகொரிய மகளிர் கால்பந்து அணிக்கு உலகக் கிண்ணப் போட்டியில் ஆடத் தடை

வட கொரிய மகளிர் கால்பந்து அணிக்கு 2015 ஆம் ஆண்டு கனடாவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால் பந்துப் போட்டியில் விளையாட சர்வ தேச கால்பந்துச் சம்மேளனம் தடை விதித்துள்ளது.

ஜெர்மனியில் அண்மையில் நடந்து முடிந்த மகளிர் உலகக் கிண்ண போட்டி யில் பங்கேற்ற வட கொரிய அணியின் ஐந்து வீராங்கனைகள் ஊக்கமருந்து பயன்படுத்தியது உறுதியானதைத் தொட ர்ந்தே சர்வதேச கால்பந்தாட்ட சம்மேள னம் இந்தத் தடையை விதித்துள்ளது.

இதில் ஊக்கமருந்துச் சோதனையில் சிக்கிய ஐந்து வீராங்கனைகளுக்கு சர்வ தேச கால்பந்துச் சம்மேளன ஒழுக்காற் றுக் குழு ஓர் ஆண்டுக்கு மேற் பட்ட தடை விதித்துள்ளது.

அத்துடன் வடகொரிய அணிக்கு பீபா நான்கு இலட்சம் டொலர்களை அபராத மாக விதித்துள்ளமையும் குறிப்பிடத்தக் கது.

# தடையை மீறி விளையாடிய அமீருக்கு ஐ.சி.சி. எச்சரிக்கை

(டுபாய்)

போட்டித்தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் இங்கிலாந்து முதல்தர போட்டியில் விளையாடிய பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் மொஹமட் அமீருக்கு சர்வதேச கிரிக்கெட் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

சூதாட்ட சர்ச்சையில் சிக்கி ஐ.சி.சி. போட்டித் தடைக்கு உள்ளான அமீர் சர்ரே அணிக்காக கடந்த ஜூன் மாதம் முதல்தரப் போட்டி ஒன்றில் விளை யாடியுள்ளார். இது குறித்து விசாரணை நடத்திய ஐ.சி.சி. அமீருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து கூறிய ஐ.சி.சி. ஊடக பேச்சாளர் கொலின் கிப்ஸன், அமீர் ஐ.சி.சி. தடையை மீறிப் போட்டிகளில் விளையாடிதற்காக அவர் மீது எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இவ்வாறு நடந்தால் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டி வரும் என குறிப்பிட்டார்.

எனினும் நட்புறவுப் போட்டி என்று தம்மை அறிவுறுத்தியதைத் தொடர்ந்தே தாம் சர்ரே அணிக்காக விளையாடியதாக அமீர் குறிப்பிட்டுள்ளார்.

# சானியா நிராகரிப்பு



(லாகூர்)

வெள்ள நிவாரண நிதி திரட்டுவதற் காக லாகூரில் கண்காட்சி ரென்னிஸ் போட்டியை நடத்த பாகிஸ்தான் ரென் னிஸ் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

இதில் விளையாட இந்தியாவின் சானியா மிர்சாவுக்கு அழைப்பு விடுக் கப்பட்டது. சுமார் ரூ.12 இலட்சம் தருவ தாகக் கூறியும், சானியா மிர்சா விளை யாட மறுத்துவிட்டார். அவரது கணவ ரும், பாகிஸ்தான் கிரிக்கெட் அணி வீரரு மான சொகைப் மலிக்கிடம் பாகிஸ்தான் ரென்னிஸ் கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடத்தியது. கண்காட்சிப் போட்டியில் விளையாடத் தரும் தொகை குறைவாக இருப்பதாக மலிக் கூறியுள்ளார். இத னால், சானியா மிர்சா விளையாடுவது சந்தேகம் என பாகிஸ்தான் ரென்னிஸ் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

## உயரிய பாரத ரத்னா விருதை

# இருவருக்குப்பகிர்ந்தளிக்க முன்னாள் வீரர்கள் கோரிக்கை

(புதுடில்லி)

நாட்டின் மிக உயர்ந்த பாரத ரத்னா விருதை ஹொக்கி ஜாம்பவான் தயான்சந்த், சச்சினுக்கு பகிர்ந்து அளிக்க வேண்டு மென இந்தியாவின் முன்னாள் ஒலிம்பிக் வீரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஒலிம்பிக்கில் தங்கம் (1964) வென்ற குர்பக்ஸ் சிங் கூறியதாவது:

சச்சினுக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டுமென ரசிகர்கள் வற் புறுத்துகின்றனர். இதனை நான் எதிர்க்கவில்லை. ஆனால், தயான்சந் திற்கு முன்பாக சச்சினுக்கு வழங்கினால், அது மிகப் பெரும் சோகச் சம்பவமாக அமையும். இருவருக்கும் சேர்த்து பாரத ரத்னா விருதை பகிர்ந்து அளிக்கலாம். இந்தியாவின் மிகச் சிறந்த ஹொக்கி வீரர் தயான்சந்த் தான் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. கால்பந்துக்கு பீலே, கிரிக்கெட்டுக்கு பிரட்மன், ஹொக் கிக்கு தயான்சந்த் என்று குறிப்பிடலாம். பந்தைக் கடத்திச் செல்வதில் கில்லாடியாக திகழ்ந்தார். இவரது ஆட்டம் தொடர்பான வீடியோ எதுவும் இல்லாதது வருத்தமான விடயம். இதனால், இளம் தலைமுறை யினர் இவரது திறமையை அறிந்து கொள்ள வாய்ப்பு இல்லாமல் போய் விட்டது எனத் தெரிவித்தார்.

மூன்று முறை ஒலிம்பிக்கில் (1948, 52, 56) தங்கம் வென்ற இந்திய அணியில் இடம் பெற்ற மற்றொரு முன்னாள் ஹொக்கி வீரர் லெஸ்லி கிளாடியஸ் கூறுகையில், தயான்சந்திற்கு உரிய கௌரவம் அளிக்கப்படவில்லை என்பது உண்மை தான்.

இதற்கு இந்திய ஹொக்கி நிர்வாகத்தின் மோசமான நிலையே முக்கிய காரணம். இது வருத்தம் அளிக் கும் விடயம். இவருக்கு நாட்டின் மிக உயர்ந்த பாரத ரத்னா விருதை முன்பே அளித்திருக்க வேண்டும். தற்போது சச்சினுடன் சேர்ந்து வழங்கலாம் என்றார்.

# ஹைதருக்கு இடமில்லை

(லாகூர்)

பாகிஸ்தான் அணியின் விக்கெட் காப்பாளர் சுல்கர்னைன் ஹைதருக்கு அந் நாட்டு முதல்தர ருவென்ரி 20 போட்டி களில் வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது.

அவரது சொந்த அணிகளான கராச்சி மற்றும் முல்தான் அணிகளில் ஹைதரின் பெயர் சேர்க்கப்படவில்லை. சுல்கர்னைன் ஹைதர் கடந்த முறை லாஹோர் ஈகல் அணிக்காக ருவென்ரி 20 தொடரில் விளையாடினார்.

நான் லஹோர் அணிகளில் ஒன்றுக் காக விளையாடவே திட்டமிட்டிருந்தேன். ஏனெனில் இவை தான் எனது சொந்த அணிகளாகும்.

இவையும் சேர்க்காவிட்டால் வேறு யார் என்னை இணைத்துக் கொள்வார்கள் என ஹைதர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் முதல்தர ருவென்ரி 20 போட்டி லாஹசீர் கடாபி அரங்கில் அடுத்த மாதம் 25 ஆம் திகதி ஆரம்பமாகவுள் ளது. இதில் 14 பாகிஸ்தான் முதல்தர அணி களுடன் ஆப்கானிஸ்தான் அணியும் பங் கேற்கவுள்ளது.

# பந்து வீச்சில் புதிய உத்தி

(லாகூர்)

பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் சயீட் அஜ்மல் தனது பந்து வீச்சு முறையில் புதிய உத்தியைப் பயன்படுத்தவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் ஐக்கிய அரபு இராச் சியத்தில் நடைபெறவுள்ள இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் இந்தப் புதிய பந்து வீச்சு முறையை பயன்படுத்தவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பந்து வீச்சு முறை பற்றி தாம் இன்னும் பயிற்சியில் ஈடுபட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ள அஜ்மல், இங்கிலாந்துத் தொடரில் இதனை அறிமுகப் படுத்துவேன் எனத் தெரிவித்தார்.

# முழுமையாகத் தயாராகவில்லை

(சண்டிகர்)

இங்கிலாந்து அணியை சமாளிக்கும் வகையில் இந்திய அணி முறையாகத் தயாராகவில்லை. ஏப்ரல் மாதம் உலகக் கிண்ணத்தை வென்ற பின் னர் இந்திய அணி ஐ.பி.எல். போட்டியில் ஆடியது. அதைத் தொடர்ந்து மேற்கிந்தியத்தீவு சென்று அனுபவம் இல்லாத அணியைத் தோற்கடித்தது.

எனவே இங்கிலாந்தில் விளையாடுவது எளி தாக இருக்கும் என்று நினைத்தனர். இந்த கடின மான தொடருக்கு இந்தியா திட்டமிட்டு முழுமை யாக தயாராகவில்லை என முன்னாள் இந்திய அணித் தலைவர் கபில்தேவ் தெரிவித்தார்.

# ஆட்டோகிராப் கேட்ட சிறுவர்களை திட்டித் தீர்த்த ஜோனதன் ட்ரொட்

(லண்டன்)


இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் ஜோனதன் ட்ரொட், தன் னிடம் ஆட்டோகிராப் வாங்க வந்த சிறுவர்களைத் தகாத வார்த்தைகளால் திட்டித் தீர்த்ததாக புகார் எழுந்துள்ளது.

அயர்லாந்து முன்னாள் கப்டன் ஜோன்ஸ்டன், டுவிட்டர் இணையத்தளத்தில், ஆட்டோகிராப் கேட்ட தனது மகன் உட்பட சிறுவர்களை ட்ரொட் திட்டியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டை ட்ரொட் மறுத்துள்ளார். இங்கிலாந்து அணியின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், ட்ரொட்டிடம் நான் இது பற்றிப் பேசினேன். அப்போது அவர் இது மாதிரிச் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்று என்னிடம் தெரிவித்தார். எனவே ஜோன்ஸ்டன் தனது புகாரை டுவிட்டர் இணையத் தளத்தில் இருந்து இப்போது எடுத்திருப்பார் என்று நம்புகிறேன் என்றார்.

# 'போல்'டிற்காகத் தங்கம் மகிழ்ச்சி என்கிறார் பிளாக்

(டெகு)





தங்கப்பதக்கத்தை போல் டிற்காக வெல்ல வேண் டும் என்று நினைத்தேன். இதில் வெற்றி கண்டதில் மிகவும் மகிழ்ச்சி என 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் தங்கப்பதக்கம் வென்ற ஜமைக்கா வீரர் யோஹன பிளாக் தெரிவித்தார்.

இந்த வெற்றி கனவு போல் இருக்கிறது. எனது பயிற்சி ஜோடியான உசேன போல்ட்டுக்கு நன்றி தெரி வித்துக் கொள்கிறேன். இந்த வெற்றியை விபரிக்க வார்த்தைகள் இல்லை. எனக்காக எனது பயிற்சி ஜோடி உசேன்போல்ட் இருக்கிறார். தற்போது எனக்கு அழ வேண்டும் என்று தோன்றுகிறது. இந்தத் தருணத்துக்காக நான் பிரார்த்தனை செய்து கொண்டு இருந்தேன்.

பால்ஸ் ஸ்டார்ட் தொடர்பான விதிமுறையில் மாற்றம் வேண்டும். முதல் தவறில் வெளியேற்று வது சரியல்ல. இன்னொரு வாய்ப்பு வழங்க வேண் டும். தங்கப்பதக்கத்தை போல்டிற்காக வெல்ல வேண் டும் என்று நினைத்தேன். இதில் வெற்றி கண்டதில் மிகவும் மகிழ்ச்சி என்றார்.

# நீளம் தாண்டுதலில் தங்கம்

(டெகு)

தென்கொரியாவின் டெகு நகரில் நடை பெற்று வரும் உலகத் தடகள சம்பியன்ஷிப் போட்டி யின் இரண்டாம் நாளில் அமெரிக்க வீராங் கனை பிரிட்னி ரீசே 6.82 மீற்றர் தூரம் நீளம் தாண்டுதல் போட்டியில் தங்கப்பதக்கம் வென்றார்.

பெண்களுக்கான நீளம் தாண்டுதலில் அமெ ரிக்க வீராங்கனை பிரிட்னி ரீசே 6.82 மீற்றர் தூரம் தாண்டி தங்கப்பதக்கம் வென்றார். ரஷ்ய வீராங்கனை ஓல்கா குஷெரெங்கா 6.77 மீற்றர் தூரம் தாண்டி வெள்ளிப்பதக்கமும், லத்விய வீராங்கனை இனெடா ராட்விகா 6.76 மீற்றர் தூரம் தாண்டி வெண்கலப்பதக்கமும் பெற்றனர்.

இதேவேளை, உலகத் தடகளப் போட்டி யில் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்பந் தயத்தில் ஒலிம்பிக் மற்றும் உலக சம்பியன் ஜமைக்கா வீரர் உசேன்போல்ட் தகுதி இழந்தார்.

மற்றவர்கள் ஓடத் தொடங்கும் முன்பே அவர் முன்கூட்டியே ஓடத் தொடங்கி தவறு செய்ததால் தகுதி இழப்பு செய்யப்பட்டு வெளி யேற்றப்பட்டார்.

அசபா பவெல் (ஜமைக்கா), டைசன் கே (அமெரிக்கா) ஆகிய முன்னணி வீரர்கள் காயம் காரணமாக இந்தப் போட்டியில் பங் கேற்காததால் உசேன்போல்ட் நிச்சயம் தங்கப் பதக்கம் வெல்வார் என்று எதிர்பார்க்கப்பட் டமை குறிப்பிடத்தக்கது.

# நட்புறவு கால்பந்தாட்டம் கங்குலிக்கு வந்தது அழைப்பு

(கொல்கத்தா)


கொல்கத்தாவில் நடைபெற வுள்ள ஆர்ஜென்டின-வெனி சுலா கால்பந்து அணிகள் இடையிலான நட்புறவு ஆட் டத்தை நேரில் காண இந்திய அணியின் முன்னாள் தலை வர் கங்குலிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆர்ஜென்டின-வெனிசுலா கால்பந்து அணிகள் இடை யிலான நட்புறவு ஆட்டம் கொல் கத்தா சால்ட் லேக் ஸ்டேடி யத்தில் எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கால்பந்து நட்சத்திர வீரர் மெஸ்ஸி தலைமையில் அர்ஜென்டின அணி களம் இறங்குவதால், ரசிகர்கள் போட்டியைக் காண ஆர்வ மாக உள்ளனர். இந்தப் போட் டியைக் காண இந்திய கிரிக் கெட் அணியின் முன்னாள் கப்டன் கங்குலி, நடிகர் கள் ரன்பீர் கபூர், ராகுல் போஸ், ஜங்கி பாண்டே, இயக்குனர் அனுராக் பாசு உள்ளிட்டோரை அழைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கங்குலி இப்போது அதிக வேலைப் பளுவில் இருப்பார். இதனால் அவர் இந்த ஆட் டத்தை நேரில் பார்க்க வரு வதை உறுதியாகச் சொல்ல முடியாது. இருப்பினும் அவரை நாங்கள் அழைப்போம் என்று போட்டி அமைப்பாளர்கள் தெரி வித்துள்ளனர். இதேவேளை, இன்று மெஸ்ஸி கொல்கத்தா வந்தடைவார் எனவும், மெஸ்சி போன்ற உலகின் தலைசிறந்த வீரர் கொல்கத்தாவில் விளை யாடுவது இந்திய கால்பந்து ரசிகர்களுக்கு கிடைத்த வரப் பிரசாதமாகும் எனவும் அவர் கள் மேலும் தெரிவித்தனர்.

# படையினரின் மதிப்பைக் கெடுக்கவே கிறிஸ் பூதங்கள் குறித்த வதந்திகள்



(கொழும்பு)

பயங்கரவாதத்தை தோற்கடித்ததன் மூலம் பாதுகாப்புப் படைகள் பெற்ற விம்பத்தையும் மதிப்பையும் கெடுப்பதற்காக கிறிஸ் பூதங்கள் குறித்த வதந்திகள் பரப்பப்படுவதாக ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் மின்சக்தி வலுசக்தி அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரனவக்க நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஜாதிக ஹெல உறுமயவின் 8 ஆவது தேசிய மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான நடவடிக்கைகளில் சில சக்திகள் ஈடுபடுகின்றன வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள சட்ட அமுலாக்கல் அமைப்புக்களின் முகாஙகளை அகற்ற வேண்டுமென சிலர் விரும்புகின்றனர்.

நாட்டின் எதிர்காலத்தை இருண்டதாக்குவதற்காக அரசாங்கத்திற்கு எதிராக உளவியல் நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டுள்ளனர். ஆதாரமற்ற வதந்திகளைப் பரப்புவோருக்கு தேவையான பதில அளிக்கப்படும்

"நாட்டை அபிவிருத்தி செய்யும் வேளையில் சமாதானத்தையும் மரியாதையையும் பாதுகாக்க வேண்டும். எமது கலாசாரம், மக்கள், சமயங்கள், சம்பந்தப்பட்ட இனங்கள் ஆகியவற்றுக்கு ஏற்ப நாட்டை அபிவிருத்தி செய்யவேண்டும். மற்றொரு ஆசிய நாட்டைப் பின்பற்ற வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. சிலர் பலவந்தமாக அரசியலமைப்பில் மாற்றங்களைச் செய்து சமூக குழப்பங்களை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்" எனவும் அவர் தெரிவித்தார்.

# இந்தியாவில் காணாமல்போன இலங்கையர் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

இந்தியாவில் காணாமல் போன இலங்கை யாத்திரிகர்களில் ஒருவர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் இந்தியாவிற்கு யாத்திரை மேற்கொண்ட மூன்று இலங்கையர்கள் காணாமல் போயிருந்தனர்.

காணாமல் போனவர்களை தேடும் நடவடிக்கைகள் இராஜதந்திர ரீதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐந்து நாட்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்த ஆனந்த குணரட்ன என்ற நபர் கண்டு பிடிக்கப்பட்டதாக இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

குறித்த நபர் இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

காணாமல் போன ஏனைய இருவரைத் தேடும் பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

# அரசியல் பேதங்களை ஒதுக்கிவைத்து விட்டு நாட்டின் முன்னேற்றத்திற்கு பாடுபடவேண்டும்

## ஐ.தே.க பிரதித்தலைவர் கரு ஜயசூரிய

(கொழும்பு)

**நாட்டின் முன்னேற்றத்திற்காக அரசியல் பேதங்களை மறந்து ஒன்றுபட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.**

எல்பிட்டியவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த கருத்தினை கூறினார். எல்பிட்டிய, தல்கஸ்வல ஹொரங்கல்ல சிறி சுதர்சனாராம விஹாரையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

இலங்கையை மீண்டும் உலகின் சிறந்த நாடாக மாற்ற முடியும் தார்மீக இயற்கையானது நாட்டிற்கு அனைத்து வளங்களையும் அளித்துள்ளது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவரும் நாட்டில் பட்டினியால் இறந்ததில்லை இந்த நாட்டில் விதை நிலத்தில் விழுந்தவுடன், அவ்விடத்தில் செடி அல்லது மரம்மொன்று முளைத்து விடும் அந்தளவிற்கு அதிர்ஷடகரமான இலங்கையில் பருவ மாற்றங்கள் எதுவும் இல்லை அனைத்து விடயங்களும் இந்த நாட்டில் காணப்படுகின்றது.



தேசிய ஒற்றுமையே நாட்டிற்கு மிக அவசியமானதாகும் அரசியல் பேதங்களை மறந்து, நாட்டின் அபிவிருத்திக்காக அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

அத்துடன், நாட்டின் சந்ததியினருக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# கட்சி பொதுச்செயலாளர்களுடன் தேர்தல் ஆணையாளர் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெறவுள்ள எஞ்சியுள்ள 23 உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்களிப்பு தொடர்பாக முக்கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளருக்கும் கட்சியின் பொதுச் செயலாளர்களுக்கும் இடையேயான இந்தச் சந்திப்பு நாளை மறுதினம் வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்தத் தகவலை, மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் டபிள்யூ. சுமணசிரி தெரிவித்தார். ஒக்டோபர் 8ஆம் திகதி இடம்பெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் தொடர்பான முதலாவதுசந்திப்பு இதுவெனவும் அவர் குறிபபிட்டார்.

இந்த முறை இடம்பெறும் தேர்தலில் 25அரசியல் கட்சிகள் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.


ஆறாயிரத்து 488 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். கொழும்பு மாவட்டத்தின் ஆறு சபைகளுக்காகவே அதிக அளவிலான வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இதற்கு 2ஆயிரத்து 520 வேட்பாளர்கள் போட்டியிடுவதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் இன்று வேட்பாளருடைய பெயர்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் டபிள்யூ.சுமணசிரி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பிறிதொரு சந்திப்பொன்று எதிர்வரும் முதலாம் திகதி பொலிஸ் மா அதிபருக்கும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையில் தேர்தல்கள்செயலகத்தில் இடம்பெறவுள்ளது..

# வரட்சியான காலநிலையால் நீர்மின் உற்பத்தி 15வீதம் வீழ்ச்சி



(கொழும்பு)


நீர்மின் உற்பத்தி 15 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. நிலவுகின்ற வரட்சியான காலநிலை காரணமாக ஒட்டு மொத்த தேவையில் 85 வீதமான அனல் மின் உற்பத்தி மூலம் பிறப்பிக்க நேரிட்டுள்ளதாக மின்சார சபையின் தலைவர் பேராசிரியர் விமலதர்ம அபேவிக்ரம தெரிவித்துள்ளார்.

மின் உற்பத்தி நிலையங்களை அண்மித்த நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் வீழ்ச்சியடைந்துள்ளமையே இதற்காண காரணம் என அவர் கூறினார்.

இதேவேளை விக்டோரியா நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 30 வீதம் வரை வீழ்ச்சியடைந்துள்ளதாக அதன் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான பொறியியலாளர் ஜே,ஏ,எஸ் ஜயசிங்க குறிப்பிட்டார். மின் உற்பத்திக்காக நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் இரண்டு மாதங்களுக்கே போதுமானதாக உள்ளதென பொறியியலாளர் தெரிவித்தார.

# நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் மூலம் எனது நடவடிக்கையை விசாரிக்க முடியாது

## முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா



(கொழும்பு)

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினால் எனது நடவடிக்கைகளை விசாரணை செய்ய முடியாது என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

பதவியிலிருந்து ஓய்வு பெற்று இரண்டு ஆண்டுகள் கடந்துள்ளதாகவும், தமது சேவையைப் பாராட்டி ஜனாதிபதி எழுத்து மூலமான கடிதம் வழங்கியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நல்லாட்சி மற்றும் ஊழல் ஒழிப்புத் தொடர்பில் கண்டி திருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பிரதம நீதியரசராக நாட்டுக்கு ஆற்றிய அளப்பரிய சேவையைப் பாராட்டுவதாகத் தெரிவித்து இந்தக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.


மனித உரிமை மீறல், ஊழல் ஒழிப்பு மற்றும் நல்லாட்சி தொடர்பாக குரல் கொடுத்து வரும் காரணத்தினால் குற்றவாளியாக்க சதித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, அதன் ஓர் அங்கமாக இந்த நாடாளுமன்றத் தெரிவுக் குழு விசாரணைகளை நோக்க வேண்டி இருக்கின்றது.

பிரதம நீதியரசராகக் கடமையாற்றிய காலத்தில் சில நீதிவான்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதாக ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு எதிராக விசாரணை நடாத்துவதற்கு ஜனாதிபதி நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்கத் தீர்மானித்துள்ளார் என்பதனை புரிந்து கொணடுள்ளேன்.

தற்போது ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்கும் ஜனக பண்டார என்பவரினால் ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. குறித்த நபர் பதில் நீதவானாக கடமையாற்றிய காலத்தில் அவருக்கு எதிராக பல்வேறு முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன இதன் காரணமாக சுய விருப்பின் அடிப்படையில் ஜனக பண்டார பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

குறித்த நபருக்கு திறைசேரியிலும் பின்னர் மத்திய கிழக்கு நாடொன்றில் தூதுவர் பதவியும் வழங்கப்பட்டிருந்தது. ஜனக பண்டார தொடர்பில் ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளது. இந்த விடயங்கள் பற்றிய ஆதாரங்களும் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சட்டத்தில் உள்ளது குறைபாடு



(கொழும்பு)

வெளிநாட்டவர்களால் இலங்கை சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு நடைமுறையிலுள்ள சட்டம் போதுமானதாக இல்லையெனவும், அதில் குறைபாடுகள் நிலவுவதாகவும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் பிரதிபா மஹனாம ஹேவா சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறு சிறுவர்களை துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தும் நபர்களுக்கு கடும் தண்டனை வழங்குவதற்கு புதிய சட்டங்களை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் குறிப்பிடுகிறார்.

# இறுதி யுத்தத்தின்போது காணாமற்போன 1000 சிறுவர்கள் குறித்து தகவல் இல்லை

(கொழும்பு)

இலங்கையில் யுத்தம் முடிவடைந்த இரண்டு ஆண்டுளுக்கு மேலாகின்ற நிலையில், இறுதி யுத்தத்தின் போது காணாமற்போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்ற சிறுவர்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தொடர்பான விபரங்கள் இதுவரை தெரியவரவில்லை.

காணாமற் போனவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக அரச அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

காணாமற்போன சிறார்களில், ஐ.நா.வின் சிறார்கள் நல அமைப்பாகிய யுனிசெவ் நிறுவனம் மற்றும் பல்வேறு அரச அமைப்புக்களின் உதவியோடு 600 பேர் வரையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளினால் மேற்கொண்ட ஆட்சேர்ப்பினால் 64 வீதமானோர் காணாமற் போயிருப்பதாகவும், 30 வீதமானவர்கள் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் காணாமற் போயிருப்பதாகவும் யுனிசெவ் கூறியிருக்கின்றது.

2009 ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் முடிவுக்கு வந்தபோது சுமார் 3 இலட்சம் மக்கள் வவுனியா மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் தஞ்சமடைந்தபோது, இறுதிச் சண்டைகள் நடைபெற்ற இடத்திற்கு வெளியில் இருந்த பெற்றோர்கள் பலர் காணாமற் போயிருந்த தமது பிள்ளைகளைத் தவிப்போடு தேடிக்கொண்டிருந்தார்கள்.

இவர்களில் பலர் கண்ணீரோடு வந்து தமது பிள்ளைகளைக் கண்டுபிடித்துத் தருமாறு தன்னிடம் கோரியதாக வவுனியா அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

பெற்றோர்களின் வேண்டுகோள்களையடுத்து, வவுனியா மாவட்டத்தில் ஐ.நா.வின் சிறுவர்களுக்கான நிதியம் மற்றும் சிறுவர்களின் நலன்களுக்காகச் செயற்படுகின்ற அரச திணைக்களங்களையும் இணைத்து, ஹெல்ப் லைன் என்ற பெயரில் காணாமற்போன சிறுவர்களைக் கண்டு பிடிப்பதற்கான அமைப்பொன்று உருவாக்கப்பட்டதாக வவுனியா அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இந்த அமைப்பிடம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெற்றோர்கள் காணாமற் போயுள்ள தமது பிள்ளைகளைத் தேடிக் கண்டு பிடித்துத் தருமாறு எழுத்து மூலமாகவும் நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

இவர்களில் 600 பேர் இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்டு பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும், ஏனையோரைக் கண்டு பிடிப்பதற்கான நடவடிக்கைகள் ஒரு வலைப்பின்னலாகப் பாதுகாப்பு அமைச்சு உட்பட பல்வேறு பிரிவுகளின் ஒத்துழைப்போடு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வவுனியா அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் தெரிவித்தார்.

## பெருந்தெருக்களில் மோட்டார் சைக்கிளுக்கு விசேட வீதி ஒழுங்கு நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டின் பெருந்தெருக்களின் போக்குவரத்தில் மோட்டார் சைக்கிளுக்கு என விசேட ஒழுங்கு ஒன்று ஒதுக்கப்படவுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் இதற்கான ஒழுங்குகள் மேற்கொளளப்பட்டு வருவதாக அதிகார சபையின் தலைவர் ரஞ்சித் பிறேமசிறி தெரிவித்தார்.

இதற்கு அமைய பாதனியவில் இருந்து அனுராதபுரம் வரையில் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் பெருந்தெருவில், மோட்டார் சைக்கிள் போக்குவரத்திற்கு விசேட ஒழுங்கு அமைக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

வீதிப் போக்குவரத்தின் போது இடமபெறும் விபத்து, மரணங்களைக் கருத்தில் கொண்டே இந்த விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அத்துடன், வீதிப் போக்குவரத்தின் போது இடம்பெறும் விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மேலும் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## நிர்க்கதியான இலங்கை மாணவர்களுக்கு மாற்றுப் பல்கலைக்கழகத்துக்கான வசதி


(கொழும்பு)

பிரித்தானியாவில் நிர்க்கதிக்கு உள்ளாகியுள்ள இலங்கை மாணவர்களை மாற்றுப் பல்கலைக்கழகங்களில் இணைத்துக் கொள்வதற்கு பிரித்தானிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

விஸா மோசடிக் குற்றச்சாட்டின்பேரில் பிரித்தானியாவிலுள்ள மூன்று பல்கலைக் கழகங்கள் அந்நாட்டு அரசாங்கத்தினால் மூடப்பட்டுள்ளன. இவ்வாறு மூடப்பட்ட பல்கலைக்கழகங்களில் கல்வி கற்றுவந்த இலங்கை மாணவர்கள் எழுபதுபேர் நிர்க்கதியாக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த மாணவர்கள் தொடர்பில் இலங்கை உயர்ஸ்தானிகராலயம் பிரித்தானிய அரசாங்கத்துடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## லக்விஜய அனல் மின் நிலையத்தின் உற்பத்தி நடவடிக்கை இடைநிறுத்தம்



(கொழும்பு)

கெரவலபிட்டி லக்விஜய அனல்மின நிலையத்தின் மின் உற்பத்தி நடவடிக்கைகள் எதிர்வரும் செப்ரெம்பர் 5 ஆம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்தியாவசியத் திருத்த வேலைகள் காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மின்சார சபையின் தலைவர் பேராசிரியர் விமலதர்ம அபே விக்ரம தெரிவித்தார்.

எனினும் செப்ரெம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னர் திருத்த வேலைகளை மேற்கொண்டு மின்சார உற்பத்தி நடவடிக்கைகளை வழங்குமாறு அதிகாரிகளிடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## சடலங்களிலிருந்து கண்கள் விற்பனை பாணந்துறை வைத்தியசாலையில் சம்பவம்

(கொழும்பு)

பாணந்துறை ஆதார வைத்தியசாலையின் சவச்சாலையில வைக்கப்படும் சடலங்களிலிருந்து கண்கள் அகற்றப்பட்டு விற்பனை செய்யப்படுவதாக பாணந்துறைப் பிரதேச சபையின் ஐ.தே. கட்சி உறுப்பினர் நந்தன சொய்சா தெரிவித்துள்ளார்.

பிரதியமைச்சர் ரெஜினோல்ட் கூரே தலைமையில் நடைபெற்ற பாணந்துறைப் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையல், கண்களைத் தானம் செய்வது மிகப்பெரிய புண்ணிய செயலாகும். எனினும் இறந்தவர் உயிருடன் இருக்கும் போதே அவர் ஒப்புதல் அளித்திருக்க வேண்டும்.

அன்றேல் அவரது உறவினர்களின் சம்மதத்தின் பேரில் அந்தக் கண்கள் கௌரவமாக அகற்றப்படல் வேண்டும். இத்தகைய ஏற்பாடுகள் இன்றி சவச்சாலையில் உள்ள சடலங்களின் கண்களைக் குரூரமாக அகற்றி விற்பனை செய்வது மனிதாபிமானமற்ற செயலாகும்.

அது இறந்துபோன நபருக்குச் செய்யப்படும் அவமரியாதையும் கூட. அதேவேளை அங்கு அகற்றப்படும் ஒவ்வொரு கண்ணும் வெறும் ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. எனவே இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட சுகாதார அமைச்சு அதிகாரிகள் தலையிட்டு இத்தகைய மிலேச்சத்தனமான வியாபாரத்தை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேணடும் என்றார்.

## பொருளாதார முன்னேற்றத்தைத் தடுக்க போலியான குற்றச்சாட்டுக்கள் - பிரதமர்

(கொழும்பு)

பொருளாதார அடிப்படையில், பலமிக்க வகையில் முன்னோக்கிச் செல்லும் பயணத்திற்கு போலியான குற்றச்சாட்டுகளை முன்வைத்து சிலர் இடையுறுகளை மேற்கொள்வதாக பிரதமர் டி.எம்.ஜயரட்ண குற்றம் சுமத்தியுள்ளார். தேசிய காப்புறுதி நிதியத்தினால் அரச சேவையாளர்களுக்காக நடைமுறைப்படுத்தப்படும் சுகாதார காப்புறுதி முறைக்கான இலத்திரனியல் அட்டையை அறிமுகப்படுத்தல், மற்றும் ஊடகவியலாளர்களுக்கான "இதுரவி" காப்புறுதி அறிமுகம் என்பன நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார். அரசியல் கட்சிகளின் நோக்கங்கள் என்னவாக இருந்த போதும் நாட்டைப் பாதுகாப்பது அனைவரினதும், கடமை எனவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

## தரக்குறைவான இறக்குமதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்

### மக்கள் விடுதலை முன்னணி வலியுறுத்து

(கொழும்பு)

தரக்குறைவான பொருட்களை இறக்குமதி செய்வோருக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலங்களில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட தரக்குறைவான பெற்றோல், சிமெந்து மற்றும் மருந்து வகைகள் தொடர்பாக அவைகள் இறககுமதி செய்த நபர்களுக்கு எதிராக இதுவரை எந்தவித விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை.



அரசாங்கத்துக்கு ஆதரவான வியாபாரிகளால் செய்யப்பட்டுள்ள இந்த மோசடி தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்குப் போதியளவு ஆதாரங்கள் இருந்த போதிலும் அவைகள் கிடப்பில் போடப்பட்டுள்ளன.

இதன் மூலம் மக்களின் பணமே வீணடிக்கப்பட்டுள்ளது. இது போன்ற நாச வேலைகளுக்கு உதவுவது தொடர்பில் தீர்மானங்களைக் கண்டனம் செய்ய வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

## புதிய சட்டமா அதிபராக பெண்ணொருவர் நியமனம்?

(கொழும்பு)

இலங்கையில் முதற்தடவையாக பெண் ஒருவர் சட்டமா அதிபராகப் பதவியேற்கவுள்ளார். பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சாந்தி ஏவா வனசுந்தரவே புதிய சட்டமா அதிபராகப் பதவியேற்கவுள்ளார. ஏற்கனவே முதன்முறையாக பிரதம நீதியரசராக சிராணி பண்டாரநாயக்க நியமிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. செப்ரெம்பர் மாதம் முதல் சாந்தி ஏவா வனசுந்தர இலங்கையின் சட்டமா அதிபராகப் பதவியேற்கவுள்ளார். இதனையடுத்து சொலிஸிட்டர் ஜெனரலாக பாலித பெர்னாண்டோ நியமிக்கப்படவுள்ளார். இதற்கிடையில் பதவியிலிருந்து இளைப்பாறும் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் அமைச்சரவையின் சிரேஷ்ட ஆலோசகராக நியமிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாடு முழுவதிலும் கடற்படை முகாம்கள் அமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பம்

(கொழும்பு)

முல்லைத்தீவு, முள்ளிக்குளம், பாணமை போன்ற பிரதேசங்களில் கடற்படை முகாம்கள் அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் டீ. டபிள்யு. ஏ.எஸ்.திஸாநாயக்க தெரிவித்துள்ளார். இதேவேளை வடக்கு, கிழக்கில் கடற்படை முகாம்கள் அமைக்கப்படவுள்ளதோடு நாடு முழுவதும் கடற்படை முகாம்கள் அமைக்கப்படவுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் ஏற்படாதவாறு பாதுகாத்துக்கொள்ளும் ஒரு முன்னேற்பாடாக இது அமையவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்ட விரோதமாக ஆட்கள் மற்றும் போதைப் பொருட்கள், ஜெலிக் நைட் போன்றன கடல் மார்க்கமாக அதிகளவில் கடத்தப்படுவதாகத் தெரிவித்த அவர், இதனைத் தடுக்கும் நோக்கமாகவே இந்நடவடிக்கை அமையப் பெறுவதாகத் தெரிவித்தார்.

# 22 இலட்சம் யூரோ நிதி ஒதுக்கீட்டின் மூலம் வன்னியில் அவசர, நிலைமாற்று உதவி

(கொழும்பு)

வன்னியில் அபிவிருத்தி சார்ந்த அவசர மற்றும் நிலைமாற்று உதவித் திட்டத்தின் கீழ் 22 இலட்சம் யூரோ பெறுமதியான பூர்வாங்க நிதி ஒதுக்கீட்டினைக் கொண்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் ஜேர்மன் சர்வதேச நிறுவனம் என்பன இணைந்து செயற்திட்ட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

வட மாகாண அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் இத்திட்டங்கள் அடுத்த வருடம் ஓகஸ்ட் வரை செயற்படுத்தப் படவுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் இடம்பெயர்ந்த மக்களை மீள ஒருங்கிணைத்து விவசாயம், சிறுதொழில் முயற்சி யாண்மை, மீன்பிடி என்பவற்றின் மூலம் அவர்களின் வாழ்வாதாரங்களை பாதுகாப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் பிரதேசங்களில் மீளக்குடியமர்ந்த 4500 குடும்பங்களின் உணவு உற்பத்தி வருமானம் என்பவற்றை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் அதிகரிப்பதே இத்திட்டத்தின் உடனடி எதிர்பார்ப்பாகும். இந்த 4500 குடும்பங்களில் 33 வீதமானவை பெண்களை குடும்பத்தலைவியாகக் கொண்டவையாக இருக்கும்.




இத்திட்டத்திற்கான தேவைகளை இனம்காண்பதற்கும் திட்டமிடுவதற்குமான பட்டறை கடந்த 22ஆம் திகதி யாழ் பொதுநூலக கேட்போர் கூடத்தில் வட மாகாண பிரதம செயலாளர் ஏ.சிவசுவாமி தலைமையில் நடைபெற்றது. வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி.ர.விஜயலட்சுமி, பிரதிப் பிரதம செயலாளர் - திட்டமிடல் இ.உமாகாந்தன் ஆகியோரும் இந் நிகழ்வில் கலந்துகொண்டார்கள்.

தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களின் உடனடித்தேவைகளை இனங்காண்பதும், மேம்படுத்தப்பட வேண்டிய துறைகளை இனங்காண்பதும், திட்டத்தினை செயற்படுத்தும் உத்திகளை முடிவு செய்வதுமே இப்பட்டறையின் முக்கிய நோக்கமாகக் காணப்பட்டது.

ஜேர்மன் சர்வதேச நிறுவனத்தின் அபிவிருத்தி சார்ந்த அவசர மற்றும் நிலைமாற்று உதவித் திட்டத்திற்கான சிரேஷ்ட ஆலோசகர் ரீபன் ஒலைன், அச் செயற்திட்டத்திற்கான தொழில்நுட்ப ஆலோசகர் எஸ். குமார குணரெட்ணம் ஆகியோர் இப்பட்டறையில் கலந்துகொண்டு அபிவிருத்தி சார்ந்த அவசர மற்றும் நிலைமாற்று உதவித் திட்டம் தொடர்பான விளக்கங்களை பங்குபற்றியோருக்கு வழங்கியிருந்தனர்.

## இலங்கையர்களுக்கு பாதிப்பில்லை

(கொழும்பு)

ஐரின் சூறாவளி காரணமாக அமெரிக்காவிலுள்ள இலங்கையர்கள் எவ்வித பிரச்சினைகளையும் எதிர்கொள்ளவில்லை என்று அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதரகம் தெரிவிக்கின்றது. அமெரிக்காவிலுள்ள பௌத்த விகாரையின் ஊடாக இது தொடர்பில் ஆராய்ந்து வருவதாக தூதரகத்தின் சிரேஷ்ட அதிகாரி வசந்தா பெரேரா தெரிவிக்கிறார்.

இதுவரை கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய இலங்கையர் எவரும் பாதிக்கப்படவில்லை என்றும், தூதரகம் மற்றும் அதன் நிர்வாகக் குழுக்கள் என்பன இணைந்து இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து வருவதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

சூறாவளி தாக்கியுள்ள பிரதேசங்களில் தொலைபேசி வசதிகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளமையால் தகவல்களை பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பதாகவும், எனினும் குறித்த மாகாணத்தின் கரையோரப் பகுதிகளில் வாழும் மக்கள் தற்போது பாதுகாப்பான பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிடுகிறார்.

# புலிகளின் முன்னணி அமைப்புகள் குறித்த இலங்கையின் கோரிக்கைக்கு பதிலில்லை

(கொழும்பு)

ஐரோப்பாவில் இயங்கும் புலிகளின் முன்னணி அமைப்புகளை பயங்கரவாத பட்டியலில் சேர்க்க வேண்டும் என்ற இலங்கையின் கோரிக்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் இதுவரை பதில் வழங்கவில்லை என ஐரோப்பிய ஒன்றியத்துக்கான தூதுவர் ரவீந்திர ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

புலிகள் அமைப்பு இன்னமும் வெளிநாடுகளில் முன்னணி அமைப்பாக செயற்பட்டு வருகிறது.

இந்தநிலையில் தமது கோரிக்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் விரைவில் பதிலளிக்கும் என்று தாம் எதிர்பார்ப்பதாக ஆரியசிங்க குறிப்பிட்டுள்ளார்.

புலிகள் அமைப்பு தடை செய்யப்படும் அதேநேரம் அதன் கிளை அமைப்புகளும் தடை செய்யப்பட வேண்டும் என்பதே இலங்கையின் கோரிக்கை என்று அவர் குறிப்பிட்டார்.

புலிகள் ஆயுத ரீதியாக தோற்கடிக்கப்பட்டுள்ளனர். எனினும் முன்னணி அமைப்புகளாக அவை, வெளிநாடுகளில் செயற்பட்டு வருகின்றன.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம், தமிழ் இணைப்புக்குழு மற்றும் தமிழ் இளைஞர் குழு போன்றவற்றையே தடைசெய்யுமாறு இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது.

# பாதுகாப்பு அமைச்சு தயாரித்த காணொளி அவுஸ்ரேலியாவில் காட்சிப்படுத்தப்பட்டது

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சினால் தயாரிக்கப்பட்ட காணொளி, அவுஸ்ரேலியாவின் கன்பரா நகரத்தில், சில தினங்களுக்கு முன்னர் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் போது அவுஸ்ரேலிய நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சிலருக்கும் இந்தக் காணொளி காண்பிக்கப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் போது சனல் 4 காணொளியின் உண்மைத் தன்மை தொடர்பில் இந்த பிரதிநிதிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டதாக வெளிவிவகார அமைச்சின் பொது மக்கள் தொடர்புப் பிரிவின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சரத் திசாநாயக்க தெரிவித்தார்.

இந்தக் காணொளி, அவுஸ்ரேலியாவில் உள்ள இலங்கைத் தூதுவராலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனிடையே சனல் 4 காணொளி காட்சிப்படுத்தப்பட்ட அமெரிக்கா, இங்கிலாந்து, சுவீடன் மற்றும் இந்தியா உள்ளிட்ட நாடுகளுக்கும், பாதுகாப்பு அமைச்சினால் தயாரிக்கப்பட்ட காணொளி திரையிடப்படும் எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன் பொருட்டு குறித்த நாடுகளில் உள்ள இலங்கைத் தூதுவராலயங்கள் ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மர்மமனிதன் அச்சுறுத்தலால் கூடிவாழும் குடாநாட்டு மக்கள்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் அதிகரித்துக் காணப்படும் மர்மமனிதனின் அச்சுறுத்தலை அடுத்து, குடியிருப்பாளர்கள் தமது வீடுகளில் இரவு வேளைகளில் தங்குவதற்கு அச்சமடைந்து "அயல்வீடுகளில் சேர்ந்திருக்கும் நிலை தோன்றியுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இரவு வேளைகளிலேயே மர்மமனிதர்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதனால்,சில குடும்பங்கள் தனித்திருப்பதற்கு அச்சமடைந்து அருகிலுள்ள வீடுகளுக்குச் சென்று தமது இரவுப் பொழுதைக் கழிக்கின்றனர்.

இவ்வாறு இவர்கள்,அயல் வீடுகளுக்குச் செல்வதனால்,இரவுவேளையில் இவர்கள் வீட்டில் எவருமில்லாத நிலையைப் பயன்படுத்தி திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டலாமெனவும் அவர்கள் அச்சமடைந்துள்ளனர்.

# வடக்கிலுள்ள 69 சிறுவர் இல்லங்களில் 25 பதிவு செய்யப்படவில்லையென தகவல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் 69 சிறுவர் இல்லங்கள் இயங்கிவருவதாகவும், இவற்றில் 44 சிறுவர் இல்லங்கள் பதிவு செய்யப்பட்ட நிலையிலும், 25பதிவு செய்யப்படாத நிலையிலும் இயங்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி,யாழ்மாவட்டத்தில் 32 சிறுவர் இல்லங்கள் உள்ள நிலையில் 26 பதிவு செய்யப்பட்டதுடன்,6இல்லங்கள் பதிவு செய்யப்படாமல் உள்ளன. அதே போன்று கிளிநொச்சியில் மூன்று பதிவு செய்யப்பட்டதுடன் மூன்று பதிவு செய்யப்படாமல் இயங்கி வருகின்றன. முல்லைத்தீவில், இரண்டு உள்ள நிலையில் ஒன்று பதிவு செய்யப்பட்டதுடன் ஒன்று பதிவு செய்யப்படாமல் உள்ளது.

வவுனியா மாவட்டத்தில் 19 சிறுவர்கள் உள்ளபோதிலும் 5 சிறுவர் இல்லங்கள் பதிவு செய்யப்பட்டதுடன்,14 பதிவு செய்யப்படாமல் உள்ளன. மன்னாரில் 10 சிறுவர் இல்லங்களில் 9 பதிவு செய்யப்பட்டதுடன் ஒன்று பதிவு செய்யப்படாமல்இயங்கி வருகிறது.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் இயங்கும் 32 சிறுவர் இல்லங்களில் 12 திருப்தியாக இயங்குவதுடன் 08 முன்னேற்றப்படவேண்டியுள்ளதாகவும் 09 மூடுவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேபோன்று கிளிநொச்சியிலுள்ள 6சிறுவர் இல்லங்களில் 02 திருப்தியானதாகவும், ஒன்று முன்னேற்றப்படவேண்டியதாகவும் மூன்று மூடுவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவிலுள்ள 2 சிறுவர் இல்லங்களில் ஒன்று திருப்தியானதாகவும்,மற்றயது மூடுவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவிலுள்ள 19 சிறுவர் இல்லங்களில் 7 முன்னேற்றப்படவேண்டியதாகவும்,12 மூடுவதற்கு ஆலோசிக்கப்பட்டதாகவும் உள்ளன. மன்னாரிலுள்ள 10 சிறுவர் இல்லங்களில் மூன்று திருப்தியாக இயங்குவதுடன்,மூன்று முன்னேற்றப்படவேண்டியதாகவும்,நான்கு மூடுவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஆயுதமின்றி செயற்படுவதால் உயிருக்கு அச்சுறுத்தல்

## பொலிஸ் அதிகாரிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸ் அதிகாரிகள் ஆயுதங்கள் இன்றி பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதால் அவர்களது உயிரின் உத்தரவாதத்திற்கு பாரியளவு மிரட்டல்கள் எழுந்துள்ளதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கிறிஸ் பூதங்கள் தொடர்பான சம்பவங்களால் பொலிஸ் அதிகாரியொருவர் மரணமடைந்ததுடன் பல்வேறு பகுதிகளில் மேலும் 15பொலிஸ் அதிகாரிகளுக்கு மேற்பட்டவர்கள் தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

அவர்கள் இவ்வாறு தாக்கப்பட்ட போது ஆயுதங்களின்றி கடமையில் இருந்ததாகவும் அதன் விளைவாகத்தான் தாம் இவ்வாறு தாக்கப்பட்டதாக தாக்குதலுக்குள்ளான பொலிஸ் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வாள், கத்தி மற்றும் மரக்கட்டைகளை எடுத்துக் கொண்டு சுமார் இருநூறு, முன்னூறுக்கு மேற்பட்டவர்கள் தாக்க முற்படும் போது அவர்களை ஆயுதங்களின்றி இரண்டு மூன்று பொலிஸ் அதிகாரிகள் கட்டுப்படுத்த எவ்விதத்திலும் முடியாது.

எனவே நாட்டில் பதட்டமான, அவதானமான சூழ்நிலைகள் ஏற்படும் போது பொலிஸ் அதிகாரிகள் ஆயுதங்களுடன் கடமையில் ஈடுபட சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என சுட்டிக்காட்டு கின்றனர் பொலிஸ் அதிகாரிகள்.

## அத்துமீறும் மீனவர் பற்றி அடுத்த மாதம் பேச்சு


(கொழும்பு)

தலைமன்னார் மற்றும் மன்னார் கடற்பரப்பினுள் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிப்பதனைத் தடுப்பது தொடர்பில் இருநாட்டு மீனவ தொழிற் சங்கங்களுக்கு இடையிலான கூட்டம் செப்டெம்பர் 10ம் திகதி வடக்கில் நடைபெறவுள்ளது.

ஒருவாரத்தினில் மூன்று நாட்களுள் 100ற்கும் மேற்பட்ட இந்திய மீனவர் படகுகள் மன்னார் கடற்பரப்பினுள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுவதாக வடக்கு மீனவ கடற் தொழிற் சங்கங்கள் தெரிவிக்கும் அதேவேளை இதுவரை 2000 படகுகள் எல்லைமீறி இருப்பதாக குறித்த மீனவ கடற் தொழிற் சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இவ்வாறு அவர்கள் ஒருநாளில் பிடித்து செல்லும் மீன் தொகையினால் இலங்கை மீனவர்கள் ஒரு மாதகாலத்துக்கு கஷ்டத்துக்குள்ளாவதாக சங்கம் குறிப்பிடுகிறது.

# இரண்டு தலைகளுடன் பிறந்த கன்றுக்குட்டி!



வியட்நாம் பகுதியின் phu எனும் மாவட்டத்தில் அண்மையில் இரண்டு தலைகளுடன் கன்றுக் குட்டி பிறந்துள்ளது. இந்தச் சம்பவம் ஹங் என்ற விவசாயியின் பண்ணையில் இடம்பெற்றுள்ளது. இது பற்றி இவர் வியட்நாம் இணையத் தள செய்திக்கு தெரிவிக்கையில், உண்மையில் எனது பசு இவவாறு இரண்டு தலைகளுடன் கன்று போட்டது வியப்பாக இருக்கிறது. இதற்கு நான்கு கண்கள் இரண்டு காதுகள் இரண்டு வாய்கள் எனக் காணப்படுவதோடு உடலின் ஏனைய பகுதிகள் சாதாரணமாகவே உள்ளது என தெரிவித்தார். இது வரை இந்தப் பசு 6 சாதாரண குட்டிகளைப் போட்டுள்ளதோடு தறபோதைய இரட்டைத்தலைக் குட்டியை ஏராளமானவர்கள் பார்வையிட்டு வருவதாகத் தெரிவித்தார்.

# எமனாகிய சீப்பு



மனிதர்களுக்கு இப்படியெல்லாம் நோய்கள் ஏற்படுகிறதா என ஆச்சரியமூட்டுகிறது. மேலைத்தேய நாடுகளில் மனிதர்களைத் தாக்கும் விந்தையான வியாதிகள். இவ்வாறான ஒரு விந்தையான வியாதிதான் இதுவும். ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த மேகன் ஸ்ரீவர்ட் எனும் அழகிய பெண் வித்தியாசமான வியாதியால் பாதிக்கப்பட்டுள்ளார். தனது தலைமுடியை சீப்புக் கொண்டு சீவினால் அவருக்கு மரணம நிச்சயமாம். இந்தப் பெண்ணுக்கு 13 வயதாக இருக்கும் பொழுது இந்த நோயின் அறிகுறி தென்பட்டது. கடந்த 2008 ஆம் ஆண்டு இவர் பாடசாலை செல்வதற்காக தாயார் தலை சீவி விடவே மயக்கமடைந்து உதடுகள் நீலமடைந்து ஆபத்தான நிலைமைக்கு மாறியுள்ளார். பின்னர் உடனடி யாக மருத்துவமணையில் இவரை அனுமதித்துள்ளார்கள். இது பற்றி வைத்தியர்கள் தெரிவிக்கையில் இவரது தலைமுடியை சீப்பினால் சீவுகின்ற போது அதனால் ஏற்படும் உராய்வு மூலம் மின்சாரம் தோற்றுவிக்கப்படுகிறது. இதனால் இவரது மூளை செயலிழப்பதனாலேயே இவருக்கு இந்நிலைமை ஏற்படுவதாகத் தெரிவித்தார்கள். மேலும் இவர் தொடர்ந்து இவ்வாறு செய்தால் உடலின் ஏனைய உறுப்புக்களும் பாதிக்கப்பட்டு இவருக்கு மரணம் ஏற்படும் எனவும் தெரிவித்தனர். குறித்த பெண்மணி பிறக்கும் போது மிகவும் குறைந்த எடையுடன் போசாக்கின்றி பறந்ததாலேயே இக்குறைபாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# குதிரை மாதிரி சாப்பிட்டாலும்...



இங்கிலாந்தில் இரண்டு பிள்ளைகளின் தாய் குழந்தைகளின் ஆடைகளை அணிகிறார். குதிரை மாதிரிச் சாப்பிட்டாலும் குண்டாகவே முடியவில்லை என்கிறார் வருத்தமாக. இங்கிலாந்தில் உள்ள மான்செஸ்டர், ஓல்டாமைச் சேர்ந்தவர் கரோல் பிரென்ச்(50). அவருக்கு 2 குழந்தைகள் உள்ளனர். ஆனால் அவரே குழந்தைகளின் ஆடைகளை அணி கிறார். மிகவும் ஒல்லிக் குச்சியாய் இருக்கிறார். அதற்குக் காரணம் டயட்டோ, உடற்பயிற்சியோ இல்லை. அவருக்கு மஸ்குலார் பைப்ரோசிடிஸ் டிஸ்ப்ரபோர்ஷன் என்னும் ஒரு வகையான தசை சம்பந்தப்பட்ட நோய் உள்ளது.

அந்த நோய் உள்ளவர்கள் எவ்வளவு சாப்பிட் டாலும் வைக்காது. பார்ப்பதற்கு எலும்பும், தோலுமாய்த்தான் இருப்பார்கள்.

# அழகு சிகிச்சை



சிங்கத்துக்கு அழகுச் சிகிச்சை செய்கிறார் இந்த அசட்டுத் துணிச்சல்காரர். அதுவும் வேட்டைக்குப் பெயர் போன தென்னாபிரிக்க சிங்கத்துக்கு. துணிச்சலான இந்தப் பயிற்சியாளர் மரணத்தை ஏற்படுத்தும் விலங்கினமான சிங்கத்துக்குத் தூரிகை மூலம் தேய்த்துக் குளிப்பாட்டி பின்னர் அதன் கால் நகங்களை வெட்டி, தலை மற்றும் முடிகளை வாரி விட்டு ஒவ்வொருநாளும் அழகுச் சிகிச்சையும் செய்கிறார். ஜம்மு என்று சிங்கத் துக்கு பெயரும் வைத்துள்ளார். சிங்கமும் அவருடன் அன்னியோன்னியமாக பழகுகின்றது. ஐம்பது வயதான Alex Larenty என்ற அழகுபடுத்தும் பயிற்சியாளர் தென்னாபிரிக்காவின் தலைநகரான ஜோகன்ஸ் பேர்க்கைச் சேர்ந்தவர். அங்குள்ள பூங்கா ஒன்றில் வேலை செய்கிறார்.

# கைத்தொலைபேசி இணையத்தளம்

கைத்தொலைபேசியில் பார்ப்பதற்குத் தகுந்தபடி அழகான மொபைல் வலை த்ளம் ஓன்லைன் மூலம் எந்த மென்பொருள் துணையுமின்றி இலவசமாக உருவாக்கலாம். கைத்தொலைபேசிகள் பெருகிவிட்ட இக்காலகட்டத்தில் மின்னஞ்சல் படிப்பதில் தொடங்கி இணையத்தளம் பார்ப்பது வரை அத்தனையும் நாம் கைத்தொலைபேசி மூலமே செய்யலாம்.

இப்படி இருக்கும் போது நம் இணையத்தளமும் கைத்தொலைபேசியில் பார்ப்பதற்கு அழகாகத் தெரியும்படி உருவாக்கினால் எப்படி இருக்கும். நமகசு உதவுவதற்காக ஒரு தளமுள்ளது.

இத்தளத்திற்குச் சென்று Go mobile என்ற பொத்தானைச் சொடுக்கி நாம் புதிதாக ஒரு இலவச கணக்கு உருவாக்கிக்கொண்டு இணையத்தளம் உருவாக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட Template (ஏற்கனவே வடிவமைப்பு செய்யப்பட்டவை) பல இருக்கிறது.

இதிலிருந்து நமக்கு வேண்டிய டிசைனை தேர்ந்தெடுத்து எளிதாக சில சொடுக்குகளின் மூலம் மாற்ற வேண்டியதை மாற்றி புதிதாக ஒரு மொபைல் இணையத்தளம் உருவாக்கலாம்.

எல்லாம் உருவாக்கிய பின் அவர்களே ஒரு இணையத்தள முகவரியும் கொடுக்கின்றனர். நாம் எமது தளத்தில் கைத்தொலைபேசி வாசகர்கள் இங்கே சொடுக்க என்று ஒரு இணைப்பு வைத்து அந்த முகவரியைக் கொடுக்கலாம், ைகத்தொலைபேசியிலும் நம் தளம் நாம் வடிவமைத்தபடி அழகாகத் தெரியும். இணையதள முகவரி:- http://mobile.wix.com/

# இலவச இணையங்கள் பற்றிய தகவல்களை பெறுவதற்கு


பரந்து விரிந்த இணைய உலகில் பல இணையத்தளங்கள் பல்வேறுபட்ட சேவைகளை இலவசமாக வழங்குகின்றது. அவ்வாறான இலவச பயனுள்ள தளங்களில் சிறந்த தளங்களை மக்களின் விருப்பத் தெரிவுகளோடு பட்டியல் படுத்துகிறது CATCHFREE.COM எனும் இணையம்.

இந்தத் தளத்தில் இணையங்களை பல்வேறுபட்ட தலைப்புக்களில் பட்டியலிடுகிறது. மிகப்பெரிய கோப்புக்களை அனுப்ப, முழுமையாக திரைப்படம் பார்க்க, குரல் அழைப்புக்களை மேற்கொள்ளல், இணைய வடிவமைப்பு, கணணி பாதுகாப்பு, ஓன்லைன் இசை, பயணசேவை, FUN, கல்வி, உடல் ஆரோக்கியம் என சுமார் 92 க்கு மேற்பட்ட தலைப்புகளில் இலவச தளங்களைத் தருகிறது.

அத்துடன் உங்களுக்கு வழங்கப்படும் பட்டியலில் ஒவ்வொரு தளத்தினையும் FACEBOOK நண்பர்கள் எத்தனை பேர் லைக் செய்துள்ளார்கள், எந்த இயங்கு தளங்களில் செயல்படவல்லது, பாவனையாளர்கள் மதிப்பீடு என்பன போன்ற பல தகவல்களைத் தருகிறது. இணையதள முகவரி:- http://catchfree.com/

கணினி மூலை

# மரணத்திலும் பிரியாத...





வாலைக் குலைத்து வரும் நாய்தான் அது மனிதனுக்கு தோழனடி பாப்பா என்று பாடி இருக்கின்றார் மகாகவி பாரதியார். கணவன் இறந்தமையை அறிந்த கணத்திலேயே உயிரைத் துறக்கின்ற மனைவியை நாம் இலக்கியப் பாத்திரங்களூடாகக் கேள்விப்பட்டு இருக்கின்றோம். எஜமானன் இறந்து விட்டார் என்பதை அறிநது பதைபதைத்துத் துடிதுடித்து இறந்து விட்டது இந்நாய்.

எஜமானனின் பெயர் ஜோன். இராணுவ வீரர். திடீரென மரணமடைந்து விட்டார். இவரது சடலம் வீட்டில் பிரேதப் பெட்டிக்குள் வைக்கப்பட்டு இருந்தது. இவர் இறந்து விட்டார் என்பதை உணர்ந்து கொண்ட செல்லப் பிராணியான நாய் பிரேதப் பெட்டிக்கு அருகில் உயிரை மாய்த்துக் கொண்டது

# கருணை மனுவை பரிசீலிக்கும் அதிகாரம் தனக்கு இல்லை என்கிறார் ஜெயலலிதா



(சென்னை)

ராஜீவ் கொலையில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள சாந்தன், முருகன் மற்றும் பேரறிவாளன் ஆகிய மூவரின் கருணை மனுக்களைப் பரிசீலிக்கும் அதிகாரம் தமிழக முதல்வருக்கு இல்லை என முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

சட்டசபையில் நேற்றுப் பேசிய அவர், மூவரின் கருணை மனுக்களையும் ஜனாதிபதி நிராகரித்துள்ளதால் அதில் தலையிட தனக்கு அதிகாரம் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மூவரும், மீண்டும் ஜனாதிபதியை அணுக வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். மூவரின் மரண தண்டனையை நிறுத்தக்கோரி காஞ்சிபுரத்தில் செங்கொடி என்ற பெண் தீக்குளித்து உயிரிழந்தது தனக்கு வருத்தமளிப்பதாக தெரிவித்த முதல்வர், யாரும் தீக்குளிப்பு போன்ற சம்பவங்களில ஈடுபடவேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார்.

# தூக்குத் தண்டனையினை நிறுத்த முதல்வரின் பரிந்துரையே போதும்

## மு.க.ஸ்டாலின்



(சென்னை)

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் ஜெயலலிதாவின் நாடகம் வெளிப்பட்டுவிட்டது என தி.மு.க. பொருளாளர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய 3 பேருக்கு விதிக்கப்பட்டுள்ள தூக்குத் தண்டனை தொடர்பான முதலமைச்சர் ஜெயலலிதாவின் அறிவிப்புக் குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் ஜெயலலிதாவின் நாடகம் வெளிப்பட்டுவிட்டது. தூக்குத் தணடனையை நிறுத்த சட்டப்பேரவையில் தீர்மானம் கொண்டு வந்தால் போதும். இலங்கை பற்றி தீர்மானம் போட்ட முதல்வருக்கு மூவரது தூக்குத் தண்டனைக்கு எதிராகப் போட முடியாதா? தூக்கை நிறுத்த தீர்மானம் தேவையில்லை. பரிந்துரை போதும் என்றார்.

# தூக்குத் தண்டனைக்கு எதிரான மேன்முறையீட்டு விசாரணை இன்று



(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின சார்பில் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு விசாரணைகள் இன்று சென்னை உயர் நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது.

இன்று மூவர் சார்பிலும் சென்னை உயர்நீதிமன்றத்தில் பிரமாண வாக்கு மூல மேன்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. சட்டத்தரணி சந்திரசேகர் இந்த மனுக்களைத் தாக்கல் செய்தார்.

இந்த மனுக்கள் மீது அவசரம் கருதி உடனே விசாரணை நடத்த வேண்டும் என்று சட்டத்தரணி சந்திரசேகர் கேட்டுக் கொண்டார். இதை நீதிபதி பால்.வசந்தகுமார் ஏற்றுக்கொண்டார். இன்று விசாரணை தொடங்கும் என்று நீதிபதி அறிவித்தார்.

இதையடுத்து இந்த மனுக்கள் மீதான விசாரணை இன்று முதல உயர்நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது. இதில் ஆஜராகி வாதாடுவதற்காக சட்டத்தரணிகளான ராம்ஜெத்மலானி, யுக்முகுக் வாகித் சவுத்திரி, காலின் கான்சிலிஸ் ஆகிய மூவரும் சென்னை வருகிறார்கள்.

# மருத்துவமனையில் இருந்த வேளை உடல், உயிரே நினைவுக்கு வந்தது

## என்கிறார் நடிகர் ரஜனி


(கோவை)

மருத்துவமனையில் இருந்த வேளை உயிர், உடல் மட்டுமே நினைவுக்கு வந்ததாகவும், பணம், புகழ் எதுவும் நினைவுக்கு வரவில்லை என நடிகர் ரஜினி சொன்னதாக கவிஞர் வைரமுத்து தெரிவித்தார்.

கோவையில் நடந்த "ஓர் அன்னையின் கனவு" என்ற நூல் வெளியீட்டு விழாவில் பேசிய கவிஞர் வைரமுத்து,

வெளிநாட்டுச் சிகிச்சை முடிந்து வீடு திரும்பிய ரஜினிகந்த் அவர்களிடம் ஒரு கேள்வி கேட்டேன், உண்மையைச் சொல்லுங்கள், நீங்கள் மருத்துவமனையில் இருந்த அந்த நிமிடத்தில் என்ன நினைத்தீர்கள் என்று கேட்டேன்.

அதற்கு ரஜினி, நான ரஜினி என்பதையே மறந்துவிட்டேன், என் உடல், உயிர் என இரண்டு மட்டுமே நினைவுக்கு வந்தது. பணம், புகழ், உற்றார், உறவினர்கள் யாரும் நினைவுக்கு வரவில்லை என்றார்.



பிறகுதான், நாம் யார் யாருக்கு என்ன செய்தோம், யார் யாருக்கு உதவி செய்யாமல் மறந்து விட்டோம் என்று எண்ணத்தோன்றியது என்று என்னிடம் ரஜினி கூறினார்.

அவர் யார் யாருக்கு என்று குறிப்பிட்டுக் கூறியது, நம்மைச் சுற்றியிருக்கும் உற்றார், உறவினர் மற்றும் நண்பர்களைத்தான், நம் உடம்பில் தெம்பு இருக்கும் போதே நம்மால் முடிந்த உதவிகளையும், நன்மைகளையும் அவர்களுக்குச் செய்து விடவேண்டும். ஒழுக்கம், நேர்மை, உழைப்பு மூன்று மட்டுமே மனித குல மேம்பாட்டுக்கு ஏற்ற மிக முக்கியமான பண்புகள் ஆகும் என்று தெரிவித்தார்.

# விரைவில் வெளியிடுவேன்

(சென்னை)

குடும்பச் சொத்து விவரங்களை விரைவில் வெளியிடுவேன் என ஆந்திர மாநில முன்னாள் முதல்வர் சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார்.

அன்னா ஹசாரேவின் போராட்டத்துக்கு தெலுங்கு தேசத் தலைவரும், முன்னாள் முதல்வருமான சந்திரபாபு நாயுடு ஆதரவு தெரிவித்திருந்தார். இதற்கு காங்கிரஸ் கட்சி சார்பில் இவருக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது. சிங்கப்பூரில் எனக்கு எந்த இடத்தில் சொத்து உள்ளது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் நிரூபித்தால் அந்தச் சொததை அவர்கள் பெயருக்கே எழுதி கொடுத்து விடுகிறேன்.

ஊழலுக்கு எதிரான போராட்டத்துக்கு என்றும் துணை நிற்பேன். தேவைப்பட்டால் என் மனைவி, என் மகன் மற்றும் எனது பெயரில் எவ்வளவு சொத்துக்கள் உள்ளன என்ற விவரங்களை விரைவில் வெளியிடுவேன் என்றார்.

# ஓராண்டு நினைவஞ்சலி

## அமரர்.திருமதி இஸ்ரேலா பராசக்தி

(முன்னாள் முகாமையாளர், கிராமிய வங்கி, நெடுந்தீவு,
அதிபர், லிட்டில் பிளவர் பாலர் பாடசாலை, திருகோணமலை)

மலர்வு : 12.01.1958 உதிர்வு : 30.08.2010



ஓடிப் போனதம்மா ஒருவருடம்
உங்களை மறந்ததேயில்லை ஒரு நிமிடம்
ஆறாது தவிக்குது எங்கள் உள்ளம்
அழுது வெறுமையானது எங்கள் இல்லம்
அன்பு தவழும் உங்கள் முகம் அதை
நினைக்கையில் துடிக்குது எங்கள் மனம்
எங்கெங்கோ இருந்தாலும் தினம் தினம்
விழிநீர் சொரியுது குளம் குளம்
உங்கள் நினைவைச் சுமையாக்கி விட்டு - நீங்கள்
பறந்து தங்கிவிட்டீர்கள் விண்ணகம்
வந்த கடன் முடித்து வானுறையச் சென்ற
உங்களை என்றென்றும் நினைத்திருக்கும்

இன்று செவ்வாய்க்கிழமை (30.08.2011) காலை 5.45 மணிக்கு திருமலை புனித மரியாள் பேராலயத்திலும், முற்பகல் 11 மணிக்கு யாழ்.புனித அடைக்கல நாயகி அன்னை ஆலயத்திலும் ஆன்ம இளைப்பாற்றிக்கான திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்

குடும்பத்தினர்.
5ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(R/073)

உலகச் செய்திகள்

# சைபீரியாவில் பறக்கும்தட்டு குள்ளமனிதர்கள் நடமாட்டம்



பனி சூழ்ந்த பகுதியான சைபீரியாவின் வான் பகுதியில் அடிக்கடி மர்மத் தட்டு பறக்கும் அதிசயம் நடைபெறுகிறது.தற்போது கண்டறியப்பட்டுள்ள வான் காட்சியில் மர்மத் தட்டு இறங்கியதும் பச்சை நிறத்தில் ஒரு குள்ள மனிதன் நடந்து செல்லும் காட்சியும் பதிவாகியுள்ளது. ரஷ்யாவின் கிழக்குப் பகுதியில் உள்ள சைபீரியாவில் மட்டும் அடிக்கடி இது போன்று மர்மத் தட்டுக்கள் பறப்பது ஏன் என்ற கேள்வி எழுந்துள்ளது.

சைபீரியா பனி உறைந்த பகுதி ஆகும். இந்தப் பகுதி சுற்றுலா பயணிகளை அதிகம் ஈர்ப்பது கிடையாது. ஆனால் தற்போது இந்த மர்மத் தட்டுக்களால் சைபீரியா மீது ஒரு மோகம் ஏற்பட்டுள்ளது.சைபீரியாவின் பின் தங்கிய பகுதியில் ஒரு மர்மத் தட்டு சீறி இறங்குவதையும் அதில் இருந்து 5 அயல் கிரக மனிதர்கள் இறங்கி நடக்கும் காட்சியும் பதிவாகி இருந்தது.

பதிவான படத்தில் அயல் கிரக மனிதன் 4 அடி உயரத்தில் காணப்பட்டார். விண்கலம் ஒளிரும் இடத்தில் இருந்து 15 அடி தொலைவில் இந்த அயல் கிரக மனிதன் நின்று கொண்டிருந்தார்.அவருக்கு அருகாமையில் அவரது அளவில் 4 குள்ள மனிதர்கள் நின்று கொண்டிருந்தனர். சைபீரியாவின் பேயன் பகுதியில் இரவு நேரத்தில் வான் தட்டு இறங்கிய 2 நாட்களில் அந்த குள்ள மனிதர்கள் தரை இறங்கி நிற்பது பதிவாகியுள்ளது.

# பேச்சுக்கு வாருங்கள் - கடாபி

## சரணடையவே பேச்சு – கிளர்ச்சியாளர்கள்

(திரிபோலி)

ஆட்சிமாற்றத்தை உருவாக்குவது குறித்து பேச்சு நடத்த வருமாறு கிளர்ச்சியாளர்களுக்கு லிபிய அதிபர் கடாபி அழைப்பு விடுத்துள்ளார்.

கடாபியின் செய்தித்தொடர்பாளரான மௌஸா இப்ராஹிம் என்பவர் அசோசியேடட் பிரஸ் செய்தி நிறுவனத்தின் நியூயோர்க்கிலுள்ள அலுவலகத்தைத் தொடர்புகொண்டு இதைத் தெரிவித்தார்.

தானும், கடாபியும் திரிபோலியில் தான் இருப்பதாக அவர் குறிப்பிட்டார். எனினும் கடாபியின் இந்த அழைப்பை தேசிய இடைக்கால குழு நிராகரித்துவிட்டது.

கடாபி சரண் அடையாதவரை கிளர்ச்சியாளர்கள் பேச்சுவார்த்தை நடத்தமாட்டார்கள் என அதன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.



அவர் சரண் அடைய விரும்பினால் பேச்சுவார்த்தை நடத்தி அவரைப் பிடிப்போம். என கிளர்ச்சியாளர்கள் அலுவலகத்தில் எண்ணெய் மற்றும் நிதி விவகாரங்களுக்கு பொறுப்பு வகிக்கும் அலி டர்ஹௌனி என்பவர் தெரிவித்தார்.

# பிரிட்டனின் வீரம் மிக்க சிறுவன்



ஆறு வயதுச் சிறுவன் ஹார்லிலேனேவுக்கு கைவிரல்கள் எதுவுமில்லை. இருப்பினும் அந்தச் சிறுவன் வாழ்க்கையை தைரியமாக எதிர்கொண்டுள்ளான்.

இந்தச் சிறுவனுக்கு பிரிட்டனின் வீரம் மிக்க சிறுவன் என்ற விருது வழங்கப்பட்டுள்ளது. அந்த சிறுவனை இளவரசர் ஹரி கௌரவிக்கவுள்ளார்.

அந்தச் சிறுவனுக்கு தினமும் ஆடை அணிவது, பல் துலக்குவது போன்றவை பெரும் சவாலாகவே உள்ளது. தனது குறைபாடு உள்ள கைகள் மூலம் அன்றாட வேலைகளைச் செய்வதில் ஹார்லிலேனே நிபுணத்துவம் பெற்றுள்ளார்.

இளவரசர் ஹரி புரவலர் ஆக உள்ள அறக்கட்டளைச் சிறுவன் ஹார்லிக்கு பிரிட்டனின் வீரம் மிக்க சிறுவன் விருதை அளிக்கிறது. இந்த விருதை இளவரசர் கையில் இருந்து பெறுவது மகிழ்ச்சியாக உள்ளது என சிறுவனின் தாயார் சமந்தா கூறியுள்ளார்.

# உலக பொருளாதாரத்தை வலுப்படுத்த அமெரிக்காவும் – ஜேர்மனியும் உறுதி

(வொஷிங்டன்)

உலக பொருளாதாரத்தை வலுப்படுத்த அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவும் ஜேர்மனி அதிபர் ஏங்கலா மார்கெலும் உறுதி பூண்டுள்ளனர்.

இரு தலைவர்களும் கடந்த சனிக்கிழமை தொலைபேசி மூலம் உரையாடியுள்ளனர். அப்போது உலக பொருளாதார மேம்பாடு குறித்து முடிவு செய்யப்பட்டது என வெள்ளை மாளிகை தெரி வித்தது. இந்த இரு தலைவர்களும் மத்திய கிழக்கு நாடுகளின் பிரச்சினை தீர்வுக் குழுவின்



அறிக்கை யையும் ஏற்றுக் கொண்டனர். இதனால் இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் இடையே நேரடிப் பேச்சு வார்த்தை நடைபெறும் சூழல் உருவாகி உள்ளது.மத்திய கிழக்கு நாடுகளின் தீர்வுக் குழுவில் ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யா, அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபை உள்ளன. ஒபாமாவும் மார்கெலும் ஒரு மாத கால இடைவெளிக்குள் மத்திய கிழக்கு பிரச்சினை குறித்து மீண்டும் விவாதித்து உள்ளனர்.பொருளாதார சவால்களுக்கு ஜி20 நாடுகளின் மூலமாக தீர்வுகாண வேண்டும் என்றும் அமெரிக்க மற்றும் ஜேர்மனியத் தலைவர்கள் முடிவு செய்துள்ளனர்.

## சிரிய பிரச்சினையைத் தீர்க்க தூதுவரை அனுப்புகிறது ரஷ்யா

(மொஸ்கோ)

சிரியாவில் ஏற்பட்டுள்ள பிரச்சினையைப் பேசித் தீர்ப்பதற்காக ரஷ்யா தனது சிறப்புத் தூதுவர் ஒருவரை அந்நாட்டிற்கு அனுப்பிவைத்துள்ளது சிரியாவின் அண்டை நாடும், நட்பு நாடுமான துருக்கி, சிரியா மீதான தனது நம்பிக்கையை இழந்து விட்டதாகத் தெரிவித்துள்ளது. அதேபோல் ஈரானும் சிரியா தனது மக்களின் கோரிக்கைகளை செவிமடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளது.

# பதிவிறக்கப் பெட்டகம்

இந்தச் சமூகமானது ஆண்களின் தலையில் தலைமைப் பொறுப்பைத் தூக்கிவைத்திருக்கிறது. அது சரியா தவறா என்பது வேறு விசயம். ஆனால், அதனை அவர்கள் செவ்வனே நிறைவேற்றவில்லை என்பது நடப்பு உண்மையாக இருக்கிறது.

- ஓவியா

ஒரு மனிதன் தனக்குத்தானே நேர்மையுடையவனாயிருந்து, எந்தவொருவரையும் அடிமைப்படுத்தாமலோ, காயப்படுத்தாமலோ, அதிகபட்ச புரிந்துணர்வுடன் உறவுகளை அணுகி, தன்னையும் தன்னைச் சுற்றியிருக்கும் அனைவரையும் அவரவரது பலவீனங்களுடன், சக மனிதப்பிறவியாகக் கருதி நேசிப்பானேயாகில் அந்த மனிதனிலிருந்துதான் மாற்றம் தனது முதற்காலடியை எடுத்துவைக்கத் தொடங்குகிறது. தனது தாயை, சகோதரியை, மனைவியை நேசிக்கவோ, புரிந்துகொள்ளவோ முடியாத ஒருவனால் பெண் விடுதலை அல்லது சமத்துவம் - அவன் என்னதான் தெருவிலிறங்கி போராடினாலும், ஆயிரமாயிரம் பெண்களைக் 'கரையேற்றினாலும்' -சாத்தியப்படக்கூடுமாவென்பது சந்தேகமே.

- நிவேதா

பொதுவாக, பெண்கள் சக பெண் படைப்பாளிகள் மீதான காட்டமான விமர்சனங்களை முன்வைப்பதையே ஆண்களும் ஊடகங்களும் விரும்புகின்றார்கள், சண்டைகளை விடுப்புப் பார்க்கும் ஒரு சுவா சியத்துடன். இவற்றுள், பெண்கள் தெளிவாகவும் தீர்மானமாகவும் சில விடயங்களில் இருக்கவேண்டி இருக்கிறது, ஏனெனில் ஆண்களது வாதங்கள் கருத்து மோதல்களாகவும் பெண்களது விமர்சனங்கள் தனிப்பட்ட எரிச்சல்களாகவுமே பார்க்கப்பட்டு வருகிறது.

- தான்யா

நம் சமூகத்தில் ஒரு பெண்ணைத் தாக்க வேண்டுமானால், ஆண்களின் மிகச் சுலபமான ஆயுதம், அவளது ஒழுக்கத்தைக் குறை கூறுவது.

- வாஸந்தி

நீ என் கைகளுக்கு விலங்கிட முனைந்திருக்காவிட்டால் நானொரு கைதியாகவே இருந்திருக்கக் கூடும்.

- ஜெயராணி

மருட்சி - பயம் என் விழிகளில் பயம் இருப்பதா அழகு? நான் எதற்கு அஞ்ச வேண்டும்? யாருக்கு அஞ்ச வேண்டும் - என்று இவள் நினைக்கவேயில்லை. ஏனெனில், இவளுடைய உடற்கூறியலே இவளுக்கு அஞ்சுவதற்கு ஒரு காரணியாகக் கற்பிக்கப்பட்டிருக்கிறது. எவரும் வலிய வந்து, 'உன்னை' பலாத்காரம் செய்துவிட முடியும். பிறகு நீ ஒன்றுக்கும் உதவாத குப்பையாவாய்!' என்ற ஓர் அச்சத்தை பெண் பூப்படைந்த நாளிலிருந்து, பெற்றோரும் மற்றோரும், உற்றவரும் ஊராரும் அவளுக்கு ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அச்சமே அவளுடைய பொருளாதார சுயச்சார்பை உறிஞ்சுகிறது, அவளுடைய கல்வியைப் பயனில்லாததாக ஆக்குகிறது, அவளுடைய திறமைகளை குடத்துக்குள் வைத்து மூடிவிடுகிறது.

- ராஜம் கிருஷ்ணன்

நடிகை ஸ்ரேயாவின் உடைபற்றிய பத்திரிகைகள் விவாதம், நமிதாவின் உடைபற்றிய சட்டமன்ற விவாதம், தசாவதார ஒலித்தகடு வெளியீட்டு விழாவில் மல்லிகா ஷெராவத் உடைபற்றிய விவாதம். இப்படி உடைகள் குறித்து தமிழ் பண்பாட்டு காவல் நிலைய கண்காணிப்பு அதிகாரிகளான கலாசாரக் காவலர்கள் ஏற்படுத்தும் சமூக அழுத்தம் ஒரு தொடர் நிகழ்வாகிக் கொண்டுள்ளது. குறிப்பாக தையல் எந்திரங்களுடன் திரிந்து கொண்டிருக்கும் இவர்கள் ஒட்டுத் துணியில் சாலையோர வாழ்க்கை வாழும் மனிதர்கள் பற்றிய எந்த அக்கறையும் செலுத்துவதில்லை என்பது ஒரு நகை முரண். பண்பாடு என்பது பெண்களால் உடுத்தப்படும் உடையின் அளவால் அளவிடப்பட்டே காக்கப்பட்டு வருகிறது. உடைகளைப் பற்றியும் பண்பாட்டைப் பற்றியும் பேசத் தொடங்கினால் கண்டிப்பாக பெண்ணியம் பற்றி பேசியே ஆக வேண்டும். காரணம் பண்பாடு என்பது பெண் உடல் தைக்கப்பட்ட சமூகம் பற்றிய பேச்சுதானே.

- ஜமாலன்

பெண்ணுக்குரிய அணிகலன்களையும் ஆணுக்குரிய இலக்கணங்களையும் பட்டியலிட்டுள்ளது திருத்தக்கதேவரின் சீவகசிந்தாமணி. ஒப்பிட்டுப் பார்த்தால் பெண்ணுக்குரியவை எல்லாம் பாலியல் சம்பந்தப்பட்டவையாகவும் ஆணுக்குரிய இலக்கணங்களெல்லாம் ஆள்வினை சம்பந்தப்பட்டதாகவும் இருப்பதை அவதானிக்கலாம்.

தமிழர் சமூகத்தில் சங்க காலந்தொட்டு ஆணுக்கும் பெண்ணுக்கும் சொல்லப்பட்ட அறங்கள் பாலியல் அடிப்படையில் எழுந்தவை பாரபட்சமானவை, இன்றைய நவீனத்துவ நோக்கில் பெண்ணுக்குப் பெரும் அநீதி இழைத்தவை. மனித வளத்தில் சரிபாதியை இனவிருத்திச் செயல்பாட்டோடும், வீட்டின் நான்கு சுவர்களுக்குள்ளும் முடக்கியவை.

சங்க இலக்கியத்திலும் தொல்காப்பிய ஆய்விலும் கூறப்பட்ட சங்ககாலத் தமிழ்ச் சமூகத்தின் ஆண்-பெண் பாலியல் அறங்கள் கடந்த ஈராயிரத்து முந்நூறு ஆண்டுகளாக மேலும் மேலும் பல்வேறு புனைவுகளைச் சூடியபடி தொடர்ந்து காணப்படுவதை உலக அதிசயங்களில் ஒன்றாகத் தமிழர்கள் கொண்டாடலாம்.

- ராஜ் கௌதமன்

# மோசமான கோளாறுகளை ஏற்படுத்தும் கிறீஸ்பேய்...

கிறீஸ் பேய் ஒரு சுழற்சி முறையில் இலங்கையை வலம் வருகிறது. கிறீஸ் என்றால் என்னவென்று எல்லோருக்குமே தெரியும். ஆனால் பேய் என்பது யார் அல்லது என்ன என்று யாராலுமே சரியாகச் சொல்ல முடியாதிருக்கிறது. நாட்டின் பல பகுதிகளிலும் இளையோரும்,முதியோரும் இரவு நேரங்களில் அலறியடித்துக்கொண்டு அது தங்களைத் தாக்கியது, அணைத்துக் கொண்டது, பாலியல் பலாத்காரம் புரிந்தது, என்றெல்லாம் கூக்குரலிட்டுக்கொண்டு மற்றும் முற்றிலும் கறுப்பு நிறமான அருவருக்கத்தக்க மனிதன் ஒருவன் இருளில் அலைந்து திரியும் கொடூரமான விந்தையைக் கண்டேன் என்றும் கூறுகிறார்கள்.

**பெரியவர்கள் தங்கள் நகைச்சுவைத் தன்மைகளை விட்டுவிட்டு அச்சத்தில் உறைந்து போனாலும், குழந்தைகள் கட்டாயம் கட்டிலுக்கு அடியில் போய் மறைந்து கொள்ளத் தான் செய்வார்கள். அவர்களைப் பாதுகாக்க இப்போது யார் இருக்கிறார்கள்? இரண்டு பேரை மட்டும்தான் எங்களால் நினைக்க முடியும்: தினசரி பத்திரிகைகளின் முற்பக்கத்தில் சிரித்தபடி காட்சி தரும் மாமாக்களான மகிந்த மாமா மற்றும் கோட்டா மாமா ஆகியோரை. சிறுவர்கள் பொலிஸ் மாமாக்களை விரும்புகிறார்களோ இல்லையோ, இந்த சிறியவர்களைப் பாதுகாக்க அவர்கள் பொலிஸ் மாமாக்களை அனுப்புவார்கள்.**

காவல்துறையினர் தாங்கள் கிறீஸ் பேயினைப் பிடித்துவிட்டதாகக் கூறுகிறார்கள், ஆனாலும் அதை வெகு சிலரே நம்புகிறார்கள்,ஏனெனில் வழக்கமாக மற்றைய கொலைச் சம்பவங்களில் சமபந்தப்பட்ட கொலைகாரர்களையும் மற்றும் குற்றச்செயல்கள் புரிந்த குற்றவாளிகளையும், ஏன் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவங்களில் கூட அவர்களைத் தாக்கியவர்களையும், காவல்துறையினர் தாங்கள் கைது செய்து விட்டதாகத் தெரிவித்தாலும் குற்றங்களுக்குப் பின்னால் இருப்பவர்களை நீதியின்

**– காமினி வீரக்கோன்**

முன் நிறுத்தத் தவறி விடுகிறார்கள். தவிரவும் அவன் அல்லது அவர்களைக் கைது செய்துவிட்டோம் எனக் காவல்துறையினர் மார்தட்டிக் கொண்டபோதும்கூட இந்தப் பேய் புராணக் கதைகளில் வருவதுபோல் வெட்ட வெட்ட உயிர்த்தெழும் பல தலைகளைக் கொண்ட பாம்பினைப் போல தென்பகுதியின் உட்புறம் முதல யாழ்பாணக் குடாநாடு வரையில் நிலைகொண்டுள்ளது.

### காவலர்களும் பேய்களும்

சில சந்தர்ப்பங்களில் இது வெகு ஜன சித்தப்பிரமை வெறி என காவல்துறையினர் கூறுகிறார்கள். அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள், மாக்கிய வெல்லியனின் மூலோபாயக் கோட்பாட்டின்படி அரசாங்கம் அவசரகால சட்டவிதிகளை அகற்றப்போவதால் அதற்குப் பதிலாக பாதுகாப்புப் படையினரை சாதாரண சட்டங்களின் படி நாட்டின் சகலபகுதிகளிலும் நகர்த்தி நிலைநிறுத்துவதற்கான தங்களின் சொந்தக் காரணங்களுக்காக இது மேற்கொள்ளப்படுகிறது, எனக் கூறுகிறார்கள். அரசாங்கத் தலைவர்களும் ராஜபக்ஷாவினது ஆட்சியை சீர்குலைப்பதற்காக மேற்கொள்ளப் படும் ஒரு பேய்த்தனமான சதி இது என்று மேலும் கூறுகிறார்கள். ராஜபக்ஷவினது மேலும் சில எதிர்ப்பாளர்கள் கூறுவது, மாநகராட்சிகளுக்கான தேர்தல்கள் நடைபெறவுள்ள சந்தர்ப்பத்தில் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் விரைவிலேயே அடுத்தவருட மொத்த உள்நாட்டு உற்பத்தி வைப்பு 8.5 விகிதத்தினால் அதிகரிக்கும் என எதிர்வு கூறியுள்ள போதிலும் அதிகரித்து வரும் விலைவாசி உயர்வினால் அவதிப்படும் மக்களை திசை திருப்புவதற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் மிகத்திறமையான ஒரு திசைதிருப்பு முயற்சி இதுஎன்று.

### நாம் அனைவருமே பேய்கள்

யார் இந்த கிறீஸ் பேய்? ஒரு வரலாற்றாசிரியர் சுட்டிக் காட்டியிருப்பது நாங்கள் எங்கள் வரலாற்றினை மறந்து விட்டோம் என்று. நாங்கள் - ஆகக் குறைந்தது சிங்களவர்கள் - எல்லோருமே பேய்கள் தான். ஞாபகமிருக்கிறதா விஜயனும் அவனது கூட்டாளிகளான கொள்ளைக்காரர்கள் 700 பேரும் 2500 வருடங்களுக்கு முன்பு தற்போது பெங்கால் என அழைக்கப் படும் இடத்திலிருந்து நாடு கடத்தப் படுவதற்காக கப்பல் ஒன்றில் ஏற்றப் பட்டு கடலில் தள்ளிவிடப்பட்டு அதன் பின்விளைவாக அவர்கள் இலங்கையில் வந்திறங்கியதையும்,அப்போது இங்கு அரசாட்சி நடத்திவந்த ராணி, பேய்களின் ராணியான - குவேனி என்பதனையும். விஜயன் அவளை மயக்கி உறவு கொண்டதுடன் தன்னை ராஜாவாக அறிவித்துக்கொண்டு கிட்டத்தட்ட 50வருடங்களுக்கு மேலாக அரசாண்டதும். அவர்களின் கூட்டின் வழி வந்தவர்கள்தான் நாங்கள் எனச் சொல்லப்படுகிறது.

(பேய்கள்)மிகவும் கொடூரமான கெட்ட ஆவிகள் என அச்சப்பட வைத்ததுடன் சில சமயங்களில் கடவுளின் நிலைக்கும் உயர்த்தப்பட்டன. எங்களது புகழ் வாய்ந்த கடந்த காலத்தைப்பற்றி என்னதான் தற்பெருமையடித்துக் கொண்டாலும் இவை எல்லாவற்றையும் மீறி இந்த அச்சம் சிங்கள மனோபாவத்தில் இன்னமும் உள்வாங்கப்பட்டுள்ளது. அதனால்தான் இன்று ஒரு சிறு குரும்பட்டி தென்னை மரத்திலிருந்து வீட்டுக் கூரைமேல் விழுந்தாலும் முழு வீட்டாருமே எழுந்திருப்பதுடன், வீட்டிலுள்ள ஆண்கள் கிறீஸ் பேய்களிடமிருந்து தங்களையும் தங்கள் நேசத்துக்குரியவர்களையும் பாதுகாப்பதற்காக பொல்லுகளையும் தடிகளையும் தேடுகின்றனர்.

### தேவை ஒரு எதிரி

நாடுகளுக்கும் அரசுகளுக்கும் அவர்களின் சொந்த நலன்களுக்காக எதிரிகள் - உண்மையான அல்லது உண்மையற்ற - தேவை என்று. மூன்று தசாப்தங்களாக ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் அனைத்துக்கும் தங்கள் குறைகள் எல்லாவற்றுக்கும் காரணம் சாட்டுவதற்கு வேலுப்பிள்ளை பிரபாகரன் இருந்தார். அடிக்கடி திரும்பத்திரும்ப ஒலித்த புலம்பல் நினைவிருக்கிறதா: இந்த மோசமான யுத்தம் மட்டும் இல்லாமலிருந்தால் நாங்கள் மற்றொரு சிங்கப்பூராக மாறியிருப்போம்? என்பதை. இப்போ எங்களிடம் பிரபாகரன் என்கிற பேய் இல்லை. ஆனால் எங்களால் சிங்கப்பூரை இன்னமும் காண முடியவில்லை. எனவே நாங்கள் இன்னுமொன்றை கண்டுபிடிக்க வேண்டாமா?

பெரியவர்கள் தங்கள் நகைச்சுவைத் தன்மைகளை விட்டுவிட்டு அச்சத்தில் உறைந்து போனாலும், குழந்தைகள் கட்டாயம் கட்டிலுக்கு அடியில போய் மறைந்து கொள்ளத்தான் செய்வார்கள். அவர்களைப் பாதுகாக்க இப்போது யார் இருக்கிறார்கள்? இரண்டு பேரை மட்டும்தான் எங்களால் நினைக்க முடியும்: தினசரி பத்திரிகைகளின் முற்பக்கத்தில் சிரித்தபடி காட்சி தரும் மாமாக்களான மகிந்தமாமா மற்றும் கோட்டா மாமா ஆகியோரை. சிறுவர்கள் பொலிஸ் மாமாக்களை விரும்புகிறார்களோ இல்லையோ, இந்த சிறியவர்களைப் பாதுகாக்க அவர்கள் பொலிஸ் மாமாக்களை அனுப்புவார்கள்.

### ஐ.தே.க வினது கேவலமான தந்திரம்?

ஆட்சி நடத்தும் தலைவர்களின் குற்றச்சாட்டுகளின்படி அரசாங்கத்தின் எதிர்க்கட்சி நாட்டின் ஸ்திரத்தன்மையை சீர்குலைக்க முயற்சிக்கிறது? நாடு முழுவதிலுமுள்ள மக்களின் மனமகிழ்ச்சி பறிபோய் விட்டது என்கிற ஒரு சிறிய காரணத்துக்காக ரணிலால் இதைச் செய்ய முடியும் அல்லது செய்ய விரும்புவார் என்பதை நம்புவது அதிகம் சாத்தியப்படாது, ஏனெனில் அவருக்கு அவரது தீவிரமான சொந்த ஆதரவாளர்களையே வரும் தேர்தல்களில் ஐ.தே.க.வுக்கு வற்புறுத்தி வாக களிக்க வைக்க இணங்கச் செய்ய வேண்டி இருக்கிறது. இளைஞர் சஜித்தையும் இந்த சந்தேகத்திலிருந்து விலக்கிவிட முடியும் ஏனெனில் ரணிலை கட்சித் தலைமையிலிருந்து விரட்டுவதே காரணமில்லாமல் பயத்தை உண்டாக்கும் அவரது இயலாமையாக உள்ளது.

நிச்சயமாக வெளிநாட்டுச் சக்திகளையும் மற்றும் தொண்டர் நிறுவனங்களையும் இந்தச் சந்தேகத்திலிருந்து விலக்கிவிட முடியாது,வெளிநாட்டவர்கள்(மேற்கிலுள்ளவர்கள்) பேய்களை நம்பாவிட்டாலும் கூட குழப்பத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களும் சிங்களம் பேசாத உன்னத தன்மை கொண்ட தொண்டர் நிறுவனங்கள் கடிதங்கள் மூலம் மேற்கினைக் கட்டுப்படுத்தியிருக்கலாம். ஆனாலும் அவர்கள் விசுவசிப்பது சாதாரண ஆவிக் கதைகளையும் அமெரிக்க சீ.ஐ.ஏ சதிகளையும்தான்.

இதில் மற்றொரு சந்தேகம் உதிப்பதற்கு பாடம் கற்றுத்தருவது என்னவென்றால் இந்த கிறீஸ் பேய் தியவன்ன ஓயா கரைகளில் வாழும் அரசாங்க பேய்களின் கண்டுபிடிப்பாக இருக்கலாம் என்பதனை. இந்த பேய்கள் வெள்ளையை அணிந்திருக்கும் அத்தோடு பிசாசு நடனம் ஆடுவதில் வல்லவை, மற்றும் மகா சோனாக்கள் (பெரிய பேய்கள்) மற்றும் (இரத்தக் காட்டேரி) என்பவற்றின் அதிகாரம் பெற்றவை. ஒருவர் மற்றொருவர் மீது இந்தப் பேய்களை ஏவிவிடுவது, குறிப்பாகத் தேர்தல் காலங்களில் வாக்கு எண்ணப் படும்போது தமது சொந்தக் கட்சியிலேயே அபேட்சகர்களுக்கு ஆயிரக் கணக்கில் விருப்பு வாக்குகள் அளிக் கப்பட்டு முடிவில் அவர்கள் மூட்டை கட்டும்போது. இந்த கிறீஸ் பேயும் அவர்களினதும் மற்றும் கட்சியினதும் சொந்த நலன்களுக்காக மேற்கொள் ளப்பட்ட கூட்டுத் தயாரிப்பாக இருக்கலாம்.

### கிறீக் யக்கா

அதேவேளை ஐ.தே.க வினரது கிறிக்கற் சுற்றாடலில் ஒரு கிறீஸ் பேயைப் பற்றி அவர்கள் பேசிக் கொள்வார்கள் - சிரித்த முகம் கொண்ட ஆறடி ஆறங்குல உயரம் கொண்ட முன்னாள் இங்கிலாந்து வீரரும் தற்போது கிரிக்கட் வர்ணனையாள



ராக மாறியிருக்கும் டோனி கிறீக் தான் அது. ஆரம்பகாலம் தொட்டு டோனி இலங்கை மீது அளவு கடந்த நட்புக் கொண்டிருந்தார். எனவே தான் ஒருதடவை ஒரு இந்திய வர்ணனையாளர், அவர் இலங்கைக்கான ஒரு இரட்டைக் குடியுரிமையைக் கொண்டிருக்கிறாரா என அவரிடம் கேட்டார். எதிர்கட்சியின் அக்கறை சம்பந்தப்பட்டிருப்பது எதிலென்றால் இலங்கையின் இயற்கைக் காட்சிகளில் குறிப்பாக அம்பாந்தோட்டையையும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளினதும் மற்றும் அதன் வளர்ச்சியிலும் டோனி வெகுவாக ஈர்க்கப்பட்டு அதன் எல்லைகளையும் மீறி அதனைப்பற்றி வெகுவாக மிகைப்படுத்திக் கூறிவந்துள்ளார். டோனியின் எண்ணம் முற்றிலும் மதிக்கத்தக்கதாகவே தோன்றுகிறது, ஆனால் துரதிருஷ்டவசமாக தேர்தல் காலத்தில் ராஜபக்ஷவின் கட்சியின் வெற்றிக்காக உதவிவந்தார். சமீபத்தில் சூரியவெவவில் ஒருபோதும் கிறிக்கட்டே விளையாடியிராத ராஜபக்ஷவின் உடன்பிறப்புகளில் ஒருவரை அவர் தனது வருணனையாளருக்கான இருப்பிடத்தினுள் கூட வைத்திருந்தார்.

ஐ.தே.கவைச் சேர்ந்தவரான எங்களில் ஒருவர் கேள்வி எழுப்பியது என்னவென்றால், பிரேமதாஸ விளையாட்டரங்கினுள் போட்டிகள் நடைபெறும்போது வருணனையாளர் இருப்பிடத்துக்குள் அவர் சஜித் பிரேமதாஸவை அழைத்து தன்னுடன் வைத்துக் கொள்வாரா, ஏனெனில் சஜித் பிரேமதாஸவும் ஒருபோதும் கிரிக்கட் விளையாடியிருக்காதபோதும், அவருடைய தந்தையார்தான் பிரேமதாஸ விளையாட்டரங்கத்தைக் கட்டினார், அத்தோடு சஜித்தும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர்தான் என்று.

# நடமாடும் மருத்துவசேவை வருட இறுதியில் ஸ்தம்பிக்கும்

## செஞ்சிலுவைச் சங்கத்திடம் நிதிப் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

நிதிப்பற்றாக்குறை காரணமாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையினரினால நடாத்தப்பட்டுவரும் நடமாடும் மருத்துவ சேவை எதிர்வரும் டிசம்பர் மாதத்துடன் நிறுத்தப்படும் நிலை ஏற்பட்டிருப்பதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையினரினால் மேற்கொள்ளப்பட்டுவரும் நடமாடும் மருத்துவ சேவை தற்சமயம் வடமராட்சி கிழக்குப் பகுதிகளுக்கு கிழமைக்கு மூன்று நாட்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த நடமாடும் சேவை அனைத திறகுமான நிதியுதவியைச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வழங்கிவருகின்றது. வடபகுதியில் இருந்து சர்வதேச செஞ்சிலுவைச சங்கம் தமது நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு வெளியேறிக் கொழும்பில் மட்டுமே இயங்கிவரும் சூழலில் அங்கிருந்து இந் நடமாடும் மருத்துவ சேவைக்கான நிதியினை வழங்கிவருகின்றது. இந்நிதியானது எதிர்வரும் டிசம்பர் மாதம் வரையுமே வழங்குவதற்குச் சர்வதேச செம்பிறைச் சங்கம் சம்மதம் தெரிவித்ததாகவும் செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன் பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதியுதவியின்றி இந்நடமாடும் சேவையை நடாத்துவதற்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையிடம் நிதி இல்லை. இதனால் நடமாடும் மருத்துவ சேவை தேவைபடும் பகுதிகளுக்கு அதனை வழங்க முடியாத இக்கட்டான நிலையில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளை உள்ளது எனவும் அவ் அதிகாரி தெரிவித்தார்.

அத்துடன் தமது கிளையின் செயற்பாட்டிற்குத் தேவையான நிதி மூலங்கள் குறித்து மீளாய்வு தேவையெனவும் அவர் குறிப்பிட்டார். (பா)

## அராலியில் பரவும் பீதி; மர்ம மனிதன் தப்பியோட்டம்



அராலி கிழக்குப் பகுதியில் மாவெட்டை மைதானத்தின் மேற்குப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் உட்புகுந்த மர்ம மனிதனால் அப்பிரதேச மக்கள் அச்சமடைந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. நேற்று இரவு 12 மணியளவில் வீட்டின் கூரையைப பிய்த்து உட்புகுந்த மர்மநபர், அந்த வீட்டின் பெண்கள் உள்ள அறையை இனங்கண்டு அதற்குள் நுழைந்தான். அப்போது சத்தம் கேட்டு பெண்கள் சத்தமிட்டனர். உடனடியாக உசாரடைந்த மர்ம மனிதன் அவர்களை அறையில் வைத்துப்பூட்டி சாவியுடன் மாயமாகிவிட்டதாக அறிய முடிகிறது. இச் சம்பவத்தினால் இப்பிரதேச பகுதியில் மர்ம நபர்களின் பிரசன்னம் அதிகமாக உள்ளதாகத தெரிவிக்கப்படுகிறது. (எப்.எஸ்)

**மக்களைத்...** தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்பதை அடிததுக் கூறுகின்றேன். தூண்டிவிட்டு வேடிக்கை பார்ததவர்களால் இன்று கைதுசெய்யப்பட்டவர்களை வெளியில் எடுக்க முடிநததா? தூண்டிவிடப்பட்டமையினால் அப்பாவிகள் பொலிஸ் நிலையத்தை உடைத்து சட்டத்தைக் கையிலெடுத்துக் கொணடதால் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜரபடுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைககப்பட்டுள்ளனர். இவர்களின் குடும்பங்களைக் கவனிக்க தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களால் முடியுமா என்று கருணா குறிப்பிட்டார்.

**படகு கவிழ்ந்து...** கடும் காற்று வீசியதாகவும், கற்கடத்தீவு கடற்பகுதியில் படகு சென்றுகொண்டிருக்கையில் மாலை 6.00 மணியளவில் படகு கவிழ்ந்ததாகவும், அதில் இறந்தவர் படகில் இருந்த வலையில் சிக்கி கடலில் மூழ்கி இறந்ததாகவும் மற்றையவர் மிதவை ஒன்றைப் பற்றியவாறு நீந்தியதாகவும் தெரியவருகின்றது. இதேவேளை குறித்த இருவரும் மாலையாகியும் வீடுதிரும்பாததை அடுத்து மண்டைதீவில் இருந்து படகுகளில் கடற்படையினரது உதவியுடன் மீனவர்கள் குறித்த இருவரையும் தேடிச்சென்றுள்ளனர். எனினும் முயற்சி பலனளிக்காததைத் அடுத்து அவர்கள் கரைதிரும்பியதுடன் நேற்றுக்காலை மீண்டும் குறித்த கடற்பகுதியில் தேடிப் பார்த்தபோது கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தவரையும் இறந்தவரது சடலத்தையும் மீட்டதாகத் தெரியவருகின்றது.

கடலில் மூழ்கிய படகு கண்டு பிடிக்கப்படவில்லை. மேலும் இச் சம்பவம் குறித்து ஊர்காவற்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (பா,90)

**பிரதி அமைச்சர்...** இங்கு இல்லாமல் இப்போது அச்சமும், பீதியும், பயமும் தணிந்து வருகின்ற நேரத்தில் இங்கு வந்து மக்களுக்கு ஏதோ கூறவேண்டும் என்பதற்காக மக்கள் முன் வந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது குற்றம் சுமத்தியிருப்பது அவரது அரசியல் நாகரீகமற்ற செயலாகும்.

அப்படியானால் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான மக்கள் மர்ம மனிதனின் அச்சுறுத்தல்கள் இருப்பதாக கூறியிருப்பது பொய்யா? மர்ம மனிதனை நேரடியாக கண்டு அவர்களை துரத்திச் செல்லும்போது அண்மையில் உள்ள பொலிஸ் நிலையங்களிலும், இராணுவ முகாம்களிலும் புகுந்திருப்பதாக மண்டூர், புதூர், களுவன்கேணி, திகிலிவெட்டை, தாண்டியடி, குறிஞ்சாமுனை, ஈச்சந்தீவு, ஊறணி, கொக்கட்டிச்சோலை, துறைநீலாவணை, செங்கலடி, காத்தான்குடி உட்பட இன்னும் பல கிராமங்களைச் சேர்ந்த தமிழ் பேசும் மக்கள் கூறுவது வதந்தியா? அல்லது பிரதியமைச்சர் கூறுவது வதந்தியா? என்பதை மக்கள் நன்கு உணர்வார்கள்.

பிரதியமைச்சர் எம் மீது அபாண்டமான முறையில் சேறுபூச முற்படுவது அவரது அரசியல் வங்குரோத்தை காட்டுவதாகவே எமக்கு தென்படுகின்றது. முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் புதைத்துவிட்டு எலும்பு இல்லாத நாக்கினால் எதையும் கதைக்கலாம் என்பதற்காக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை அவதூறாக கதைப்பதற்கு இவருக்கு எந்த விதத்திலும் அருகதை இல்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் தெட்டத் தெளிவாக கூற விரும்புகின்றோம் இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

## சீரடைகிறது அஞ்சல் சேவை

(முள்ளியான்)


வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மீளக்குடியேறிய கிராமங்களில் உள்ள மக்களுக்கான அஞ்சல் சேவைகள் மீண்டும் ஆரம்பித்து நடைபெற்று வருகின்றது.

வெற்றிலைக்கேணி, கட்டைககாடு, நித்தியவெட்டை, கேவில், போக்கறுப்புக் கிராமங்களில் மக்கள் மீளக்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட பின்னர் முள்ளியான் உப அஞ்சல் அலுவலகம் சொந்த இடத்தில் திறக்கப்பட்டு இவர்களுக்கான அஞ்சல் சேவைகள் இடம்பெற்று வருகின்றது. (70)

**தேசிய அரசாங்...** என குறிப்பிடப்படுகிறது.

தேசிய பிரச்சினைகள் மற்றும் அபிவிருத்தித் தொடர்பில் அரசாங்கத்திற்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையில் பொதுவான இணக்கப்பாடு எட்டப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். தேசிய அரசாங்கமொன்றை உருவாக்குவதன் மூலம் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் வலுவான பிணைப்பை ஏற்படுத்தும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இதேவேளை, புலம்பெயர் தமிழர்கள் இதுவரையில் அராசங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து எவ்வித கருத்துக்களையும் வெளியிட்டதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். புலம்பெயர் தமிழர்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என அவர் அறிவிததுள்ளார். எனினும், நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பிலான கருத்துக்களை முன்வைத்தால் மட்டுமே புலம்பெயர் தமிழர்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## பனம் கைப்பணிப் பயிற்சி; வன்னியில் புதிய செயற்திட்டம்




பனை அபிவிருத்திச் சபையினால் பனம் கைப்பணி மற்றும் உற்பத்திப் பயிற்சிநெறி ஒன்று பூநகரி, அக்கராயன் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இப் பயிற்சி நெறியை எதிர்வரும் முதல் வாரங்களில் நடத்துவதற்கான ஒழுங்குகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் இதனைப் பனை அபிவிருத்திச் சபை தலைவர் பசுபதி சீவரத்தினம் ஆரம்பித்துவைக்கவுள்ளார்.

6 மாதகாலம் நடைபெறவுள்ள இப்பயிற்சி நெறியில் 25 பேர் இணைந்து கொண்டு பயிற்சி பெறவுள்ளனர். வார நாட்களில் 8 மணித்தியாலம் இப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறவுள்ளது. இப் பயிற்சியைப் பெற்ற பயிற்சியாளர்கள் பனை அபிவிருத்திச் சபையில் உற்பத்தியாளராக இணைத்துக் கொள்ளப்பட்டு அவர்களுக்கான சந்தை வாய்ப்புப் பெற்றுக கொடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எஸ்)

## மீன்பிடிப் படகுகள் மீளக் கையளிப்பு



(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பிரதேச மக்கள் போர்ச் சூழல் காரணமாக இடம்பெயர்ந்து சென்றவேளை விட்டுச் சென்ற தும்புக் கண்ணாடியிழைப் படகுகள், வெளியிணைப்பு இயந்திரங்கள் ஆகியன வழங்குவதற்கான நிகழ்வு நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு கட்டைக்காடு புனித கப்பலேந்தி மாதா ஆலய வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக 553 ஆவது படைப்பிரிவு கட்டளைத் தளபதியும் சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி கிழக்கு அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதன், ஆழியவளை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மேஜர் றஜீவ், யாழ்ப்பாண மாவட்ட கடற்தொழில நீரியல்வளத்துறை உதவிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன், மருதன்கேணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஐ.பி. ரோகண, ஆகியோருடன் வடமராட்சி கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாச பிரதிநிதிகள், சங்கங்களின் பிரதிநிதிகள், கிராம அலுவலர்கள், கடற்தொழில் பரிசோதகர், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

உரிய ஆவணங்கள் சமர்ப்பித்த இருவருக்கு வெளியிணைப்பு இயந்திரங்களும் 69 பேருக்குப் படகுகள் பெறுவதற்கான ஆவணங்களும் வழங்கப்பட்டன. (70)

செய்திப்பரணம்

**உலங்கூர்தி பூப்போட உசாரடை திருடர்கள் அலங்கமலங்க பக்தர், அரிவையரின் - பலலட்சம் தங்கநகை அபேசாக்க தருணமதை உருவாக்கி பங்கம் விளைவித்த பாவி!**



# செயற்கை அவயவம் பொருத்துதல் யாழில் விசேட சிகிச்சை முகாம்

## இந்திய துணைத் தூதரகம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் வடமாகாண சுகாதார அமைச்சின் ஒருங்கிணைப்புடன் செயற்கை அவயங்களை பொருத்தும் விசேட சிகிச்சை முகாம் ஒன்றை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்முகாமில் சேவையினை வழங்க இந்திய ஜெய்ப்பூர் நகரத்திலிருந்து விசேட நிபுணர் குழுவொன்று வருகைதரவுள்ளது. இச்சிகிச்சை முகாம் எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் ஒருமாத காலத்திற்கு கோண்டாவில் பிரதேச வைத்தியசாலையில் இடம்பெறவுள்ளது.

வடமாகாணத்தைச் சேர்ந்த செயற்கை அவயவங்கள் பொருத்தப்படவேண்டியவர்கள் இச்சேவையைப் பெற்றுக்கொள்ளலாம். இச்சேவையைப் பெற விரும்புபவர்களின் பட்டியல் ஏற்கனவே வடமாகாணத்தைச் சேர்ந்த 5 மாவட்டங்களிலும் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகள் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே தமது பெயர்களைப் பதிவுசெய்தவர்களுக்கு அந்தந்தப் பிரதேசத்திற்குரிய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைமூலம் இச்சேவையைப் பெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

இச்சேவை தேவைப்படுபவர்கள் இதுவரை தமது பெயர்களைப் பதிவுசெய்யத் தவறியிருப்பின் உடனடியாக அருகில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்துகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# 'திவிநெகும' செயற்திட்டம் யாழில் மீண்டும் தொடர்கிறது

(தொல்புரம்)

'திவிநெகும' பயனாளிகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் தற்போது கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வழங்கப்பட்டு வருகின்றன.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாக 100 பேர் இத்திட்டத்திற்கென யாழ். மாவட்டத்தில் கிராம அலுவலர்களாலும், சமுர்த்தி அலுவலர்களாலும் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். இதன்படி முதற்கட்டமாக ஒருதொகுதி பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான விவசாய உள்ளீடுகள் அண்மையில் வழங்கப்பட்டிருந்தது.

அதன் தொடர்ச்சியாக மீதமுள்ள பயனாளிகளுக்கும் 'திவிநெகும' விண்ணப்பப் படிவம் அலுவலர்களால் வழங்கப்பட்டு வருகின்றது. எனவே தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் தமது பிரிவு அலுவலர்களுடன் தொடர்புகொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (26)

# மர்ம மனிதன் பீதி வலி.மேற்கில் தொடர்கிறது

(தொல்புரம்)

வலிகாமம் மேற்கில் மூளாய், சுழிபுரம், பாணாவெட்டி, தொல்புரம் மேற்கு பகுதிகளில் மர்ம மனிதர் நடமாட்டம் காரணமாக பொதுமக்கள் இரவு வேளைகளில் அச்சத்துடனேயே தமது பொழுதைக் கழித்து வருகின்றனர்.

கடந்த சில நாட்களாக இப்பகுதிகளில் சந்தேகத்திற்கிடமானவர்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதால் இரவு வேளைகளில் தாம் தூக்கமின்றி விழித்திருப்பதாக பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் நேரகாலத்துடன் வீடுகளுக்குள் சென்று முடங்கிக் கொள்வதால் மாலை வேளைகளில் வீதிகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன. (26)

# இலங்கை மின்சார சபை ஊழியர்கள் அடுத்தவாரம் பணிப்புறக்கணிப்பு

இலங்கை மின்சார சபை ஊழியர்கள் எதிர்வரும் 7 ஆம் திகதி பகல் 12 மணிமுதல் அரைநாள் வேலை பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடுவுள்ளதாக இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற் சங்கங்களின் சம்மேளன செயற்குழு உறுப்பினர் ரஞ்சன் ஜயலத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் அவர் அங்கு கருத்து தெரிவிக்கையில்,

2006ம் ஆண்டு நூற்றுக்கு 33 சதவிகித சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டது ஆனால் 2009 வழங்கப்படுவதாக கூறப்பட்ட நூற்றுக்கு 22 சதவிகித சம்பள அதிகரிப்பு வழங்கப்படவில்லை. இதனை முன்னிட்டு செப்டெம்பர் 7ம் திகதி பகல் 12 மணிமுதல் அரைநாள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளோம்.

இதுவரை 900 மில்லியன் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்க வேண்டியுள்ளது. பணிப் பகிஷ்கரிப்பினை மேற்கொள்ளும் போது மாலை வேளைகளில் பொதுமக்களுக்கு பாரிய நெருக்கடி ஏற்படும் அதற்கு உரிய அதிகாரிகள் பதிலளிக்க வேண்டும். பணிப் பகிஷ்கரிப்பை முன்னெடுப்போம், முடியுமானால் அமைச்சர் தடுக்கட்டும், தடுப்பதற்கு ஒரே வழி சம்பள அதிகரிப்பினை வழங்குவது மாத்திரம்தான் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## ஐந்து சந்தியில் விபத்து பெண்கள் இருவர் காயம்

ஐந்து சந்திப் பகுதியில் ஆட்டோ சறுக்குண்டு கவிழ்ந்ததில் விபத்துக்குள்ளாகிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று மதியம் 12.00 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த சின்னத்துரை விஜயராணி (வயது-48) கணபதி தவமணி (வயது-68) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எஸ்)

## தேர்தல் விதிகள் மீறல் இதுவரை 15 பேர் கைது

தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்பட்ட 15 சந்தேகநபர்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத பிரச்சாரம், சட்டவிரோத போஸ்டர் ஒட்டுதல் உள்ளிட்ட விடயங்களுடன் தொடர்புபட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தேர்தல் சட்டங்களுக்கு கட்டுப்பட்டு அனைத்து கட்சியினரும் செயற்பட வேண்டுமென காமினி நவரட்ண கேட்டுக் கொண்டுள்ளார்.

# மாதகல் மீனவர்களுக்கு அடிப்படை வசதிகள்

(யாழ்ப்பாணம்)


அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் மாதகல் கிராமிய மீனவர்களுக்கான அடிப்படை வசதிகள் IOM நிறுவனத்தால் அமைக்கப்பட்டது. இதில் கூறுவிலை மண்டபம், பலநோக்கு மண்டபங்கள் உள்ளடங்கலாக 5.9 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்டது.

இன்று திறந்துவைக்கப்படவுள்ள இக்கட்டடங்களினால் மீனவர்கள் அவர்களது உபகரணங்களைப் பாதுகாக்கவும், இயந்திரங்கள், வலைகள் சீர்செய்யும் இடமாகவும் அமையவுள்ளது. இதுதவிர மீனவர்கள் ஓய்வெடுக்கும் இடமாகவும் அமைகின்றது. இவ் அமைவிடத்தால் 700 மீனவக் குடும்பங்கள் நன்மையடையவுள்ளன.

அவுஸ்திரேலிய நிறுவனத்தின் நிதியுதவியுடன் இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் அமைக்கப்பட்ட இவ் அமைவிடத்துக்கு கடற்தொழிலாளர் சங்கம், மீன்பிடித் திணைக்களம், பிரதேச செயலகம், பிரதேச சபை, மாதகல் பங்குத்தந்தை வண. ஆனந்தகுமார் போன்றோர் பங்களிப்பு வழங்கியுள்ளனர். (எப்.எஸ்)

# நோய்க்கு ஆய்வு; அவதானம் தேவை

## நோயாளர் உரிமைக்கான மக்கள் இயக்கச் செயலாளர்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் சில பகுதிகளில் உள்ள மருத்துவ ஆய்வுகூடங்களில் அரச அங்கீகாரம் பெற்ற MLT கள் கடமையாற்றுவதில்லை என நோயாளர் உரிமைக்கான மக்கள் இயக்க இணைச்செயலாளர் தெரிவிக்கின்றார்.

ஆய்வுகூட நடவடிக்கையில் ஈடுபடும் நிபுணர்கள் குறிப்பாக அரச அங்கீகாரம் பெற்ற MLT களாக இருக்கவேண்டும். ஏனெனில் ஆய்வுகூட பரிசோதனைகளின் அடிப்படையில்தான் மருத்துவர்கள் நோயை நிதானிக்கின்றனர்.

எனவேதான் ஆய்வுகூட பரிசோதனைகள் முற்றும் முழுதும் கற்றுணர்ந்த அரச அங்கீகாரமுள்ள MLT களால் மேற்கொள்ளப்படவேண்டும். அப்போதுதான் வைத்திய ஆய்வுகூட அறிக்கை உறுதிப்படுத்தப்பட்ட ஆய்வுகூடத்தில் அரச அங்கீகாரம் பெற்ற MLT கள் உள்ளனரா என விசாரித்து அறியும் உரிமை பொது மக்களுக்கு உண்டு எனக குறிப்பிட்டுள்ளார். (எப்.எஸ்)

# 'மௌனம்' வெளிவரும்

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் இருந்து மாதாந்த கலை, இலக்கிய சஞ்சிகையான 'மௌனம்' வெளிவர இருக்கின்றது.

தீவுக்கூட்டங்களில் பெரிய தீவாக விளங்கும் நெடுந்தீவில் இருந்து வெளிவரும் இச்சஞ்சிகை அப்பிரதேச மண் வாசனையும் தமிழ் பிரதேசங்களுக்கு இலக்கிய ஈரத்தை கொடுப்பதாகவும் அமைந்து இருக்கும். கிராமத்தில் உள்ள கலைஞர்களின் திறமைகளை வெளிக்கொணர இருக்கும் இச்சஞ்சிகைக்கு வாழ்த்து வழங்கி சஞ்சிகை சிறக்க ஊக்குவிக்க வேண்டும்என சஞ்சிகை ஏற்பாட்டுக் குழுவினர் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# முதலுதவிப் பயிற்சி

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு ஆழியவளை சீ.சீ.த.க. பாடசாலையில் இன்று பாடசாலை மாணவர்களுக்கான முதலுதவிப் பயிற்சி வகுப்பினை இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையினர் நடத்தவுள்ளனர்.

சுமார் 30 வரையான மாணவர்கள் கலந்துகொள்ளும் முதலுதவிப் பயிற்சி வகுப்புக்கான ஒழுங்குகளை பாடசாலை அதிபர், இலங்கை செஞ்சிலுவைச் சங்க வடமராட்சி கிழக்குப் பிரிவு, இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளை ஆகியோர் இணைந்து செய்துள்ளனர்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வடமராட்சி கிழக்குப் பிரிவு தொண்டர்களுக்கான இரண்டு நாள் முதலுதவிப் பயிற்சி வகுப்பு அண்மையில் பிரிவு அலுவலகத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (70)

# பாலியல் நோய்த்தாக்கம் யாழில் அதிகரிக்கிறது

யாழ்ப்பாணத்தில் பாலியல் நோய்த்தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெறுவோரின் தொகை திடீரென அண்மைக்காலமாக அதிகரித்திருப்பதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அறிவித்துள்ளது. யாழ். மாவட்டத்தில் பாலியல் ரீதியான நோய்த்தொற்று காரணமாக சிகிச்சை பெறுவதற்காக மாவட்ட வைத்தியசாலைகளுக்கு வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுவதாகவும் சிகிச்சை பெறுவதற்காக வருவோரில் பெரும்பாலானவர்கள் இளம் பராயத்தினர் எனவும் யாழ். பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனை தெரிவித்துள்ளது.

# கசிப்பு வியாபாரி கைது சமூகசேவை செய்யப் பணிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோத மதுபான உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கையில் ஈடுபட்ட நபருக்கு கிளிநொச்சி நீதிமன்றம் இரண்டு வார சமூகசேவை செய்யுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மதுவரி நிலைய பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது குறித்த நபர் தன்வசம் 12 லீற்றர் கசிப்பு வைத்திருந்த குற்றத்தின் பேரில் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

குறித்த வழக்கின் விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதியிடம் குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டு கருணைமனு ஒன்றையும் தாக்கல் செய்துள்ளார்.

கருணை மனுவைச் சமர்ப்பித்ததை இட்டு வழக்கினை விசாரணை செய்த கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிபதி பெ. சிவகுமார் குற்றவாளிக்கு சமூகத்தைச் சீரழிக்கம் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடக்கூடாது என எச்சரித்துடன், நீதிமன்றம் கோவில், பாடசாலை போன்ற இடங்களில் இரண்டு வார கால சமூகசேவை செய்ய வேண்டும் என உத்தரவிட்டார்.

இதனை மீறும் பட்சத்தில் இரண்டு மாதகால சாதாரண சிறைத தண்டனையும் அனுபவிக்க வேண்டுமெனத் தீர்ப்பளித்துள்ளார். (எஸ்)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஓகஸ்ட் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.